# யார் பொறுப்பு?

தமிழக முதல்வர்

டாக்டர் மு. கருணாநிதி

# பதிப்புரை

சட்டமன்றக் கூட்டவையில் மேதகு ஆளுநர் கே.கே. ஷா அவர்கள் ஆற்றிய உரையின் மீது, உறுப்பினர்கள் எழுப்பிய விவாதங்களுக்கு முதல்வர் கலைஞர் அவர்கள், சனவரி 28-ஆம் நாள் சட்டமன்றப் பேரவையிலும், 29-ஆம் நாள் மேலவையிலும் ஆற்றிய பதிலுரை ''யார் பொறுப்பு?'' என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டு, வழக்கம் போல் 'தமிழரசு' ஏட்டின் இலவச இணைப்பாக மலர்ந்திருக்கிறது. தமிழ்ப் பெருமக்களுக்கு இதனை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

*—செய்தி, மக்கள் தொடர்புத் துறை,*
*தமிழ்நாடு அரசு.*

# யார் பொறுப்பு?

## சட்டப் பேரவையில்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது ஏழு நாட்கள் நடந்துள்ள விவாதத்திற்குப் பதில் அளிக்கின்ற வகையில், நான் இந்த மன்றத்தில் நிற்கின்றேன். மாண்புமிகு காங்கிரஸ்கட்சியினுடைய தலைவர் அவர்களும், மற்றும் வேறு கட்சிகளுடைய தலைவர்களும் கவர்னரின் உரை விவாதத்திலே பேசி முடிக்கிற நேரத்தில், ஒவ்வொரு உரையிலும் அவர்கள் கடைசியாக வைத்திருக்கிற முத்தாய்ப்பு, 'நீங்கள் செய்ய வேண்டிய ஒரு பெரும் சாதனை, பதவியைவிட்டு விலகுவதுதான்' பதவியை விட்டு வெளியேறுவதுதான் 'என்கின்ற வாசகமாகும். அது ஒரு வேளை இந்தத் தடவை, இந்தக் கூட்டத் தொடரில், எதிர்க் கட்சியின் தலைவர்களால் ஒரு வேளை எடுத்துச் சொல்லப்படாமல் இருந்துவிடுமோ என்று எதிர்பார்த்ததற்கு மாறாகத்தான் அவர்கள் அனைவருமே அந்தப் பொன்னான வாசகத்தோடு தங்கள் உரையை முடித்திருக்கின்றார்கள்.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், 76 பேர் இந்த உரையிலே தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்களோடு 76-வது பேர் முடிந்து 77-வது நபராக நான் இப்பொழுது பேசுகிறேன். ஆக, 76-ல் மீண்டும் நாங்கள்தான் பேசிக்கொண்டிருப்போம் இந்த இடத்தில் என்பதற்கு 'இது ஒரு நல்ல அடையாளமாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.





**'76ல் மீண்டும் நாங்கள்தான் இங்கே பேசிக் கொண்டிருப்போம்.**

இந்த அவையினுடைய உறுப்பினராக இருக்கிற மாண்புமிகு ஜோதி அம்மையார் அவர்கள் குடியரசு நாளையொட்டி பத்மஸ்ரீ என்ற விருதினைப் பெற்றமைக்குத் தலைவர் அவர்களே! தாங்கள் இந்த அவையின் சார்பில் தங்களுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கிறீர்கள். தாங்கள் அளித்துள்ள அந்த வாழ்த்தோடும், பாராட்டோடும் நானும் என்னுடைய இதயமார்ந்த வாழ்த்துக்களை திருமதி ஜோதி அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரை, தமிழகத்தில் நேர்ந்துவிட்ட மிகப் பெரிய துயரச் சம்பவத்தைத் தொடக்கமாகக் கொண்டு இங்கே ஆற்றப்பட்டிருக்கிறது. தமிழ் இனத்தின் தனிப் பெரும் தலைவராகவும், உலகப் பகுத்தறிவாளர் இயக்கத்திலே முன்வரிசையிலே வைத்து எண்ணப்படத்தக்க நிலையிலே பணியாற்றியவராகவும், இந்திய சீர்திருத்தவாதிகளில் முன்னணியில் நிற்பவர்களுக்குள்ளே ஒருவராகவும் திகழ்ந்த தந்தை பெரியார் அவர்களுடைய மறைவுக்கு ஆளுநர் அவர்களின் உரையின் வாயிலாக வெளியிட்டுள்ள இரங்கலோடு இந்த மாமன்றத்திலுள்ள எல்லாக் கட்சியினுடைய உறுப்பினர்களும் தங்களுடைய இதயத்தை இணைத்தது பெரியார் அவர்களுக்கு நாம் செலுத்துகின்ற மரியாதையாகும். மரியாதை மட்டும்போதாது. அவர்கள் எந்த ஜாதி சமயச் சழக்குகள் நாட்டை விட்டு அகல வேண்டும் என்று கருதினார்களோ அவைகளுக்கெல்லாம் நாமும் நம்மால் இயன்ற அளவில் நம்முடைய நேரத்தைச்

செலவிட வேண்டும். அவைகளை அழிப்பதற்கு, மூடக் கொள்கைகளைக் குழிதோண்டிப் புதைப்பதற்கு அனைவரும் ஒருமித்த கருத்தோடு உழைத்திட வேண்டும் என்கின்ற கூளுரையையும் எடுத்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஆளுநருடைய உரையில் மிக முக்கியமாக மாநில அரசுக்கு மத்திய அரசு நியாயமாக வழங்க வேண்டிய பங்குத் தொகைகள் அளிக்கப்படவில்லை, உதவிகள் வழங்கப்படவில்லை, அவைகளைக் கோருகின்ற தன்மையில் ஆளுநர் உரையின் வாசகங்கள் பல்வேறு இடங்களில் ஒளிவிட்டுக் கொண்டிருக்கின்றன. அதுபற்றி இங்கே இரண்டு விதமான கருத்துக்கள் பேசப்பட்டன. எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்காரிடத்திலே நீங்கள் மோதுகிறீர்கள், மத்திய அரசையே குறை கூறுகிறீர்கள் என்கின்ற ஒரு கருத்து. வேறு ஒரு கருத்து, நீங்கள் மத்திய அரசிடத்தில் கேட்க வேண்டிய முறையில் கேட்கவில்லை, புத்திசாலித்தனமாகக் கேட்கவில்லை, திறமை காட்டிக் கேட்கவில்லை, சாதுர்யமாக வாதாடவில்லை என்றெல்லாம் இன்னொரு கருத்து இங்கே வெளியிடப்பட்டது. நான் மத்திய சர்க்காரோடு ஏன் மோதுகிறீர்கள் என்று கேட்ட அந்தக் கருத்தை விட, கொஞ்சம் கடுமையாகவும் காரசாரமான வார்த்தைகளையும் கலந்து, உங்களுக்குக் காரசாரத் தன்மை இல்லை, திறமையில்லை மத்திய அரசோடு வாதாட என்று குற்றம் சாட்டப்பட்ட அந்தக் கருத்துக்களுக்கு நான் அதிக மதிப்பைத் தருகிறேன். ஏனென்றால், எப்படியோ ஒரு வகையில் மத்திய சர்க்கார் தரவேண்டிய இடத்தில் இருக்கிறது, மாநில சர்க்கார் பெறவேண்டிய இடத்தில்




பெரியாருக்குச் செலுத்தும் மரியாதை.

இருக்கிறது. ஆகவே இங்கே ஆற்றப்படுகின்ற உரைகள், மாநில சர்க்காரைக் குறை கூறிச் சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டுகள், நீங்கள் மேலும் தீவிரமாகவும், திறமையாகவும் மத்திய சர்க்காரிடத்தில் கேட்க வேண்டும் என்று கூறி எங்களை ஊக்கப்படுத்துகின்ற வகையிலே அமைகின்ற காரணத்தினால், சொல்லிலேதான் காரசாரம் இருக்கிறதே அல்லாமல், எடுத்துக் கொண்ட பொருளில் காரசாரம் இல்லை. ஆகவே நம்மை ஊக்கப்படுத்துகிறார்கள், உற்சாகப்படுத்துகிறார்கள் என்கின்ற அளவில் நான் இந்தக் கருத்துக்கு மதிப்பு அளிக்கத் தயாராக இருக்கிறேன்.

ஆனால், ஒன்று மறந்துவிடக் கூடாது. இன்னும் நாம் வேகமாகவும், வலியுறுத்தியும் மத்திய சர்க்காரிடத்திலே மாநில சர்க்காருக்குத் தேவையான பல காரியங்களைப் பெற வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதில் இரண்டு விதமான கருத்துக்கு இடமே இல்லை. ஆனாலும் இந்த 6, 7 ஆண்டுக் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்த அளவுக்கு மத்திய அரசாங்கத்தினிடத்தில் தட்டிக் கேட்டு, வலியுறுத்தி, வாதாடிப் போராடிப் பல்வேறு பயன்களை மாநிலத்திற்குப் பெற்றிருக்கிறது என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. மத்திய சர்க்காரைக் கேட்கத் துணிவு இல்லை என்று வாதாடுகின்ற நண்பர்களுக்குச் சொல்வேன் 1970-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் டெல்லிப் பட்டணத்தில் நடைபெற்ற

**மத்திய சர்க்கார், தரவேண்டிய இடத்தில் இருக்கிறது;**
**மாநில சர்க்கார் பெற வேண்டிய இடத்தில் இருக்கிறது.**



தேசிய வளர்ச்சிக் குழுவின் கூட்டத்தில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிய விவாதம் நடைபெற்ற பொழுது நான் உரையாற்றியநேரத்தில் குறிப்பிட்டேன்: நீண்ட நெடுங்காலமாகக்கேட்டு வருகின்ற சேலம் உருக்காலைத் திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெறவில்லை என்றால் தமிழ் நாட்டிலே இருக்கிற மக்களுடைய சார்பாக நான்காவது ஐந்தாண்டுத் திட்ட வரைவை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்று திட்டவட்டமாக அறிவித்தேன். நான் பெருமைக்காகச் சொல்லவில்லை. அவ்வளவு வேகமாக வாதாடிய காரணத்தினால் சேலம் உருக்காலை நமக்கு விரைவிலே கிடைத்தது என்பதையும், அதனுடைய தொடக்க விழாவை இந்தியாவினுடைய தலைமை அமைச்சர் மதிப்பிற்குரிய இந்திரா காந்தி அம்மையார் நடத்தி வைத்தார்கள் என்பதையும் நாடு நன்றாக உணரும். ஆகவே, சேலம் திட்டத்திற்காக நாம் போராடியிருக்கிறோம்; நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஏற்க இயலாது என்று கண்டிப்பாகச் சொல்கின்ற அளவுக்கு முதலமைச்சர்கள் கலந்து கொண்ட தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் நான் எடுத்துக் கூறியிருக்கிறேன்.


வீராணம் திட்டம் மத்திய அரசாங்கத்தினுடைய திட்டம் இல்லை என்றாலும் கூட, அது பல கோடி ரூபாய்த் திட்டம் என்கிற காரணத்தினால், இருக்கின்ற முறைப்படி மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற வேண்டும் என்கிற காரணத்தினால், அதற்காகவே கிட்டத்தட்ட ஓராண்டுக் காலம் மாநில அரசு மத்திய அரசோடு வாதாடி, அதைப் பெறுவதிலும் வெற்றி பெற்றிருக்கிறது.

தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு அனுமதி பெறுவதற்காக நானும், நம்முடைய அமைச்சர் பெருமக்களும், நம்முடைய அரசு அலுவலர்களும் எத்தனை முறை டெல்லியிலுள்ள அமைச்சர்களைச் சந்தித்துப் பேசியிருப்போம், பிரதம அமைச்சரைச் சந்தித்துப் பேசியிருப்போம், அதை அமைப்பதற்கான காரணங்கள் எவ்வளவு பொருத்தமானவை என்பதனை எடுத்துக் கூறியிருப்போம் என்பதை மறந்துவிடக் கூடாது. அதற்குப் பிறகுதான் நாம் அந்த அனுமதியை அவர்களிடத்திலே பெற முடிந்தது என்பதை யாரும் மறந்துவிட இயலாது.

அதைப் போலவே, தூத்துக்குடியில் ஜாயிண்ட் செக்டாரில் ஓர் உரத் தொழிற்சாலை ரூ. 100 கோடி அளவுக்கு இன்றைக்குத் தொடங்கப் பெற்று, அதனுடைய முதல் கட்ட வேலைகள் ஆரம்பமாகி விட்டன என்றால், அதற்கும் இந்த அரசு முன்னோடியாக இருந்து, மத்திய சர்க்காரோடு வாதாடிப் போராடி அதையும் பெற்றிருக்கிறது.

நெய்வேலி இரண்டாவது சுரங்கத் திட்டம்—அந்தத் திட்டத்திற்கு நம்முடைய அரசு எத்தனை முறைகள் குரல் எழுப்பியிருக்கிறது என்பதை மறுப்பது அவ்வளவு நல்லது அல்ல. பல முறை குரல் எழுப்பியிருக்கிறோம். ஒரு முறை, நெய்வேலி இரண்டாவது


**ரூபாய் 100 கோடிக்கு உரத் தொழிற்சாலையை நிறுவிடும் அனுமதியை வாதாடிப் பெற்றிருக்கிறது.**





சுரங்கத் திட்டம் வருகின்ற ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெறப் போவதில்லை என்ற செய்தி பத்திரிகையில் வந்தவுடன் நம்முடைய அதிகாரிகள் டெல்லிக்கு அனுப்பப்பட்டார்கள். நான் உடனடியாக மத்திய அமைச்சரோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். அதற்குப் பிறகு இந்த மாமன்றத்தில் ஒரு தீர்மானத்தைப் போட்டோம். நெய்வேலி இரண்டாவது சுரங்கத் திட்டம் இந்தத் திட்டத்தில் கண்டிப்பாகச் சேர்க்கப்பட வேண்டும் என்கின்ற தீர்மானத்தை ஒரே மனதாக நாம் நிறைவேற்றினோம். அந்தத் தீர்மானத்தை அன்று மாலையே நம்முடைய அமைச்சர் திரு இராசாராம் டெல்லிக்கு எடுத்துச் சென்றார்கள். பிரதம அமைச்சரிடம் அளித்தார்கள். அதோடு கூட முடிந்துவிட வில்லை. அதற்குப் பிறகும் தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டம் 9—12—1973 அன்று நடைபெற்ற பொழுது நான் அந்தக் கூட்டத்தில் குறிப்பிட்டேன், வலியுறுத்திப் பேசினேன். நம்முடைய மின் உற்பத்தித் திட்டங்கள் நிறைவேற்றப்படா விட்டால் தமிழகத்தின் எதிர்காலம் வளம் மிகுந்ததாக இருக்காது என்று நான் சொன்னேன். அப்படிச் சொன்னவுடன் பதிலளித்த திட்ட அமைச்சர் திரு தார் அவர்கள் குறிப்பிட்டார்கள்; அவர்கள் குறிப்பிட்டதை அப்படியே இங்கே குறிப்பிடுகிறேன்:

"I would assure the Chief Minister of Tamil Nadu that, as far as, the expansion of power based on lignite is concerned, this matter has been discussed by the Finance Minister and by me with the Ministers from both the Federal Republic of Germany and also the German Democratic Republic who have great experience in exploitation of low grade coal as we have in the case of Tamil Nadu. I would also draw his kind attention to the series of meetings we have had with the Chief Minister, with his officers who have been very co-operative in ensuring that nearly a thousand mega watt of power is established at Tuticorin and for this, it will be recalled we have taken into account the supply of coal by the sea route, through considerable distance at considerable cost. We have also taken into account the establishment of Kundah and Solaiyar Projects. I mentioned this in order to allay apprehensions, if there was any room for it, for my distinguished friend, Mr. Karunanidhi, that in the matter of development, he need have no apprehensions whatsoever from us, from the Planning Commission, because in his case, and if I may say so, in no other case, I always have an enquiry or two which I receive from the Prime Minister."

*என்று இதே வாசகத்தைத் திட்டக் குழுவினுடைய துணைத் தலைவர் அமைச்சர் தார் அவர்கள் தேசிய வளர்ச்சிக் குழுவிலே நம்பிக்கை ஊட்டுகின்ற விதத்திலே குறிப்பிட்டார்கள். அது மாத்திரமல்ல.*






அதற்குப் பிறகு சனவரி 1-ஆம் நாள் அன்று நடைபெற்ற திட்டக் குழுவின் கூட்டத்திலும் நானும் அமைச்சர் மாதவனும் கலந்து கொண்டபோது இதே கருத்துக்களை எடுத்துச் சொல்லி இதற்குப் பச்சைக் கொடி காட்டப்படுகிறது என்ற அளவுக்கு மேலும் நம்பிக்கை ஊட்டுகின்ற விதத்தில் திட்டக் குழு நமக்கு அறிவித்திருக்கின்றது.

நான் இவைகளை எடுத்துச் சொல்வதற்குக் காரணம், எத்தனை முறை நாம் இவைகளைப் பற்றி அணுகியிருக்கிறோம், நமது அணுகு முறைகளைப் பற்றி மத்திய அரசு எந்த அளவுக்குப் பெருமைப்படுகிறது, எந்த அளவுக்குப் பாராட்டுகிறது, எந்த அளவுக்குக் கவனம் செலுத்துகிறது, என்பதை எடுத்துக் காட்டத்தான். அணுகுமுறை சாதாரணமானதாக இருந்தால், நாம் எடுத்துச் சொல்கின்ற காரணங்கள் போலியானவைகளாக இருந்திருந்தால், எடுத்து வைக்கின்ற நிலைமைக்கு இயலாதவர்களாக இருந்திருந்தால்—நமது பொன்னப்ப நாடார் அவர்கள் அழகாகக் குறிப்பிட்டார்களே கையாலாகாதவர்கள்—ஆள லாயக்கற்றவர்கள் என்று—அப்படிப் பட்டவர்களாக இருந்தால், நாம் நம்முடைய அணுகு முறையைச் செய்கிறோமோ, இல்லையோ, மத்திய சர்க்கார் பாராட்டுகின்ற அளவுக்கு இருக்கின்றது என்பதை யாரும் மறந்துவிட வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஐந்து கோடி ரூபாய் பாம்பன் பாலத் திட்டத்திற்காக மாநில அரசு மத்திய சர்க்காரோடு வாதாடித் தான் பெற்றிருக்கிறது. ஆகவே, அணுகு முறையிலே எந்தவிதமான தடையுமில்லை,

தேக்கமுமில்லை, திறமைக் குறைவுமில்லை என்பதை நான் இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.


கவர்னர் உரையில் அடுத்து மிக மிக முக்கியமாகக் குறிப்பிடப் படுவது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம். இந்தத் திட்டத்தில் நாம் முதலில் ரூ. 1,532 கோடிக்காவது ஐந்தாவது திட்டம் அமைய வேண்டுமென்று விரும்பினோம். இதற்கான காரணங்களை எடுத்துக் கூறினோம். விவாதத்திற்குப் பிறகு, குறைந்தபட்சம் ரூ. 1,200 கோடியிலாவது நமது திட்டம் அமையவேண்டுமென்று நாம் நமது திட்ட நகலைச் சமர்ப்பித்தோம். ஆளுநர் அவர்களின் உரையிலே குறிப்பிட்டிருப்பதைப் போல், 1974 சனவரி 1-ஆம் தேதி திட்டக் குழுவோடு நாம் நடத்திய பேச்சு வார்த்தையின்போது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாண்டிற்கு ரூ. 108 கோடி அளவுக்குத்தான் வசதிகள் தரப்படும் என்று திட்டக் குழு நம்மிடத்தில் சுட்டிக்காட்டியது. அது முடிந்த முடிவு அல்ல; ஆனால் நாம் எடுத்துச் சொல்வது, நடப்பு ஆண்டிலேயே — இப்போது நடந்து கொண்டிருக்கின்ற ஆண்டிலேயே ரூ. 126 கோடிக்குத் திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற போது, நீங்கள் ஐந்தாவது திட்டத்தின் முதல் ஆண்டே அதற்கும் குறைவாக ஒதுக்குவது என்பது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல என்று எடுத்துக் காட்டி வாதிட்டிருக்கின்றோம். அது மாத்திரமல்ல. ஒன்றை ஞாபகப் படுத்தினோம். தேசீய வளர்ச்சிக் குழுக் கூட்டம் நடைபெற்றபோது தமிழகத்தின் சார்பாக நானும், கர்நாடக முதல்வரும் மேற்கு வங்க முதல்வரும் ஒரு கருத்தை அங்கே அழுத்தந் திருத்தமாக எடுத்துச் சொன்னோம். அதாவது, தேசீய வளர்ச்சிக் குழுக் கூட்டம் தொடங்குவதற்கு முன்பு திட்டக் குழுவிலிருந்து மாநில அரசுகளுக்கு ஒரு தகவல் அனுப்பப்பட்டது. அது என்னவென்றால், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டுத் திட்டத்தின் அளவு நடைமுறை ஆண்டுத் திட்ட அளவில் தான் இருக்கும். அந்த அளவுக்குத் தான் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று அவர்கள் ஒரு தகவலை அனுப்பினார்கள். அதைத் தமிழகமும், கர்நாடகமும், மேற்கு வங்கமும் தேசீய வளர்ச்சிக் குழுவிலே கடுமையாக எதிர்த்ததன் காரணமாக, அப்போது அனுப்பிய தகவலை நாங்கள் திரும்பப் பெற்றுக் கொள்கிறோம் என்று திட்டக் குழுவினுடைய அமைச்சர் மதிப்பிற்குரிய தார் அவர்கள் அங்கே எடுத்துச்சொன்னார்கள். நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் ரூ. 126 கோடி நடப்பு ஆண்டு—அதே இந்த ஆண்டும் இருக்குமானால் "Tempo of economic activity" அதாவது பொருளாரத்தின் வளர்ச்சி வேகம் தடைபட்டுப் போய் விடக்கூடும். எனவே, ரூ. 126 கோடி என்பதை ரூ. 150 கோடி என்ற அளவுக்காவது ஆக்கித் தரவேண்டுமென்று நாங்கள் வலியுறுத்தியிருக்கின்றோம். இப்பொழுதும் நம்பிக்கொண்டிருக்கின்றேன், சுமார் ரூ. 150 கோடி அளவுக்காவது வருகின்ற ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாண்டுத் திட்டம் அமையுமென்று:—

அடுத்து, ஆறாவது நிதிக் குழு. அது பற்றிய பிரச்சினையை ஆளுநர் அவர்கள் . . .

டாக்டர் எச். வி. ஹாண்டே: மதிப்புக்குரிய முதலமைச்சர் அவர்கள் ரூ. 150 கோடிக்கு இந்த திட்டமிடுவதாக எடுத்துச் சொன்னார்கள். நான் சொன்னது, டி.பி. தார் மீண்டும் தமிழக முதலமைச்சர் மீதே குற்றம் சாட்டிக் கொண்டிருக்கிறார். எக்ஸ்ட்ரா இன்கம் ரூ. 165.85 கோடி கொடுக்க முடியாததால் நிதி ஒதுக்க முடியவில்லை என்று குற்றச் சாட்டை உங்கள் அரசின் மீதே சொல்கிறார். அதற்கு என்ன விளக்கம் தந்தீர்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவைகளுக்கெல்லாம் விளக்கம் தரப்பட்டிருக்கிறது. நாம் வரி போடுவதைப் பொறுத்து நம்முடைய வருமானம், வசதியைப் பெருக்கிக்கொள்வதைப் பொறுத்துத்திட்டங்கள் அமையும் என்று சொன்னார்கள். அதைப் பற்றி விவரமாகப் பேசியிருக்கின்றோம். அந்த விவாதங்கள் மிக விரிவான முறையில் நடைபெற்றிருக்கிறது. நம்முடைய ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிப்பேசிக்கொண்டிருக்கின்ற நேரத்தில் அதில் மேலும் விளக்கங்களை அளிக்க நான் தயாராக இருக்கின்றேன்.

ஆறாவது நிதிக் குழுவினிடம் நமது கோரிக்கைகளை, மாநில அரசின் தேவைகளைச் சரியாக எடுத்து வைக்கவில்லை என்றுகூட இங்கே பேசப்பட்டது. நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன். ஆறாவது நிதிக் குழுவின் அறிக்கைக்கேற்ப நம்முடைய தமிழக அரசு பதில் அறிக்கையைத் தயாரித்து 6-வது நிதிக் குழு எப்படியெல்லாம் தமிழ் நாட்டைக் கவனத்தில் வைக்க வேண்டும்., எந்தெந்த வகையில் எல்லாம் தமிழ்நாட்டினுடைய பிரச்னைகளைத் தீர்க்க வேண்டும், மாநிலங்களுக்காக அந்த ஆறாவது நிதிக் குழு எந்தெந்த அடிப்படையில் தன்னுடைய பணியினைச் செய்திட வேண்டும் என்பதற்கு, வேறு சில மாநிலங்கள் எல்லாம் நம்மைப் பாராட்டுகின்ற அளவுக்குக்கூட சில அடிப்படை வரையறைகளைச் செய்து அளித்திருக்கின்றோம். அது மாத்திரமல்ல. மேலவை உறுப்பினர்களுக்கும் பேரவை உறுப்பினர்களுக்கும் 1973-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலேயே நாம் சிக்ஸ்த் ஃபைனான்ஸ் கமிஷன். அனுப்பியுள்ள அறிக்கை - மெமோராண்டம் அளிக்கப்பட்டிருக்கிறது. அது குறித்துப் பேரவையிலும்மேலவையிலும் நாம் அனுப்பியுள்ள அந்த அறிக்கையை ஆதரித்து மாண்புமிகு உறுப்பினர்கள் சில பேர் பேசி இருக்கிறார்கள். ஆனால் இங்கே சில பேர் பேசுகின்றநேரத்தில் ''அதை நாம் சரியான முறையில் அணுகிடவில்லை. அதன் காரணமாக ஆறாவது நிதிக் குழு நமக்குத் தரவேண்டிய வாய்ப்பு வசதிகளையெல்லாம் இழந்து விட்டோமெ''ன்று குற்றஞ் சாட்டினார்கள். ஆறாவது நிதிக் குழு வந்த நேரத்திலே தமிழ்நாட்டிலே உள்ள சில பேர் அந்த நிதிக்குழுவைச்சந்தித்துப் பேசினார்கள். அவர்கள் வருவதைக் கேள்விப் பட்டவுடன் நாங்கள் நிதிக் குழு சம்பந்தமாக மாநிலங்களுக்கு ஒதுக்குகிற நிதி சம்பந்தமாகப் பேசலாமா என்று அவர்களைக் கேட்டு, அப்படிக் கேட்டவர்களை அவர்கள் அழைத்துப் பேசியிருக்கிறார்கள். திரு ராஜமன்னார், திரு. சந்தானம், மாறன், எம்.பி. ஆகியவர்கள் அந்த நிதிக் குழுவைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். அப்படிப் பலரும்கூட அதிலே ஆர்வம்




'சுமார் 150 கோடி ரூபாய் அளவுக்காவது, வருகிற ஐந்தாண்டுத் திட்டத்தில், முதலாண்டுத் திட்டம் அமையும்'

படைத்தவர்கள் பேசியிருக்கலாம். நான் பேசாததைக் குற்றமாகச் சொல்லவில்லை. பிப்ரவரி மாதத்தில் கமிஷனின் அறிக்கை இங்கே வைத்த பிறகும் அதுபற்றி எதையும் சொல்லாமல் இன்றைக்கு கவர்னரின் உரையின் மீது ஆறாவது நிதிக்குழு இன்னும் அதிகமான முறையில் நியாயம் வழங்கியிருக்கலாம் என்று எடுத்துக்காட்டிய பிறகு நியாயம் வழங்கப்படாததற்குக் காரணம் நாம் அணுகிய முறை சரியானதல்ல என்று கூறுவது பொருத்தமுடையதல்ல. நாம் அணுகுமுறையில் ஆறாவது நிதிக் குழுவின் முன்னால் வைத்த சில முக்கியமான கருத்துக்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மத்திய அரசு மாநிலங்களுக்கு வரி, வருவாய், உதவித்தொகை மானியங்கள் ஆகியவற்றைப் பிரித்து வழங்கும் ஏற்பாட்டில் பல குறைபாடுகள் இருக்கின்றன. நிதிக் குழுவும் திட்டக் குழுவும் மாநிலங்களின் தேவையைத் தனித்தனியே கருதிப் பார்த்ததற்குப் பதிலாக மாநிலங்களின் தேவை அனைத்தையும் ஒருசேர நிதிக் குழுவே கருதிப் பார்க்க வேண்டும். இது நான் முதலில் குறிப்பிட்டது.

அடுத்து, பின் தங்கிய பகுதிகளின் பிரச்சினைகளை ''குறைந்த அளவு தேவையான திட்டங்கள் (Minimum needs programmes) நிறைவேற்றுவதன் மூலம் தீர்ப்பதென்று கொள்வோமானால் பின்னடைந்த நிலை என்ற அடிப்படையில் திரும்பத் திரும்ப மாநிலங்கள் பிரிக்கப்பட வேண்டியதில்லை என நாம் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தோம். என்ன செய்கிறார்கள் என்றால் பின்னடைந்த மாநிலங்கள், பிற்போக்கான மாநிலங்கள் என்று சில மாநிலங்களைத் தொகுத்து வைத்துக் கொண்டு அவைகளுக்கு அதிக உதவிகளைச் செய்கிற ஏற்பாட்டினைத் திட்டக் குழுவும், நிதிக் குழுவும் செய்கின்றன. அதற்காகத்தான் நாம் சொல்வது, இந்தியாவில் உள்ள பின் தங்கிய பகுதிகள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு, எந்த எந்தத் துறையில் அவை பின்தங்கி இருக்கின்றன என்பதைக் கண்டு, அவற்றுக்கு என்று 'மினிமம் நீட்ஸ் ப்ரொக்கிராம்' தீட்டுவார்களானால் பின்னடைந்த நிலை என்ற அடிப்படையில் திரும்பத் திரும்ப மாநிலங்களைப் பிரிக்க வேண்டியதில்லை, முற்போக்கான மாநிலங்கள் என்ற அடிப்படையில் நாங்கள் எங்கள் தேவைகளை இழக்க நேரிடாது என்ற கருத்தோடு இந்த ஒரு முக்கியமான கருத்தையும் எடுத்துச் சொன்னோம்.

மேலும் வளர்ச்சியுற்றது என்று குறிப்பிடப்படும் மாநிலங்களிலும், பின்தங்கிய பகுதிகள் இருக்கத்தான் செய்கின்றன என்பதையும் சுட்டிக் காட்டினோம். ஒரு பகுதி பின்னடைந்த நிலையில் உள்ளதுஎன்று தீர்மானிக்க 'தனி நபர் வருமானம்' (Per capita in come) சரியான அளவு இல்லை என்பதையும் நாம் சுட்டிக் காட்டினோம்.

எப்படி பர்காபிடா இன்கம் கணக்கிடுகிறார்கள் என்றால், ஒரு மாநிலத்தில் இருக்கிற 200 பணக்காரர்கள், மிச்சமிருக்கிற சாதாரண மக்களையும், கூட்டிப் பார்த்து, இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து, மொத்தத்தால் வகுத்துச் சராசரி வருமானத்தைக் கணக்கிடுகிறார்கள். ஏ என்பவர் ஒரு பணக்காரர்—மாதம் ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கிறார். பி என்பவர் ஒரு சாதாரண நிலையில் உள்ளவர். மாதம் 200 ரூபாய் சம்பாதிக்கிறார். இந்த இரண்டு பேர்களுடைய வருமானத்தையும் கூட்டி ரூ. 1,200 என்று கொண்டு, அதை இரண்டால் வகுத்து, ஆளுக்கு ரூ. 600 வருகிறது என்று பார்க்கிறது என்பது, பார்ப்பதற்கு அழகாக இருக்கலாம். ஏ சம்பாதிப்பது ஆயிரம் ரூபாய்; பி. சம்பாதிப்பது 200 ரூபாய் தான். இந்த இரண்டையும் கூட்டி, 1,200 ஐ இரண்டால் வகுத்தால் பர்காபிடா ரூ. 600 கிடைக்கிறது. ஆகவே அதை அளவுகோலாக வைத்துக்கொள்ளக்கூடாது என்பதையும் 6-வது நிதிக் குழுவிடம் எடுத்துச் சொன்னோம்.

இயற்கை வளங்கள் நமது மாநிலத்தில்—நம்முடைய பெரியவர் மணலி அவர்கள் குறிப்பிட்டது போல்—மற்றவர்களைக் காட்டிலும், இயற்கை வளங்கள் மிகக் குறைவானவர்களாக நாம் இருக்கிறோம் என்பதையும் நிதிக் குழுவுக்கு வெகு விளக்கமாக எடுத்துச் சொன்னோம்.

மேலும் ஒரு மாநிலம் வரி வருவாயை (டாக்ஸ் எபர்ட்ஸ்) பெருக்குவதற்கு எடுத்துள்ள முயற்சியை எண்ணிப்பாராமல் பற்றுக்குறை வரவு செலவுத் திட்டத்தைக் கொண்ட மாநிலங்களுக்கு உதவித் தொகை அளிப்பதானது மாநிலங்கள், மேலும் பற்றுக்குறை வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கத் தூண்டுகோலாய் அமையும். பற்றுக்குறை வரவுசெலவுத் திட்டமாக இருந்தால் அந்த மாநிலத்திற்குத் துண்டுவிழுகிற அந்த அளவுக்கு நிதி வழங்கப்படும். மிகுந்த இடைவெளி நிரப்பப்படும் என்ற சூழ்நிலை இருந்தால் நாம் பற்றுக்குறை பட்ஜெட் அளித்தால்தான் பணம் கிடைக்கும் என்ற நிலைமை மாநிலங்களில் ஏற்படும். ஆகவே அந்த அடிப்படையில் எதுவும் பரிந்துரை செய்யக்கூடாது என்று அரசின் சார்பில் எடுத்துச் சொன்னோம்.

திட்டக்குழுவினிடத்தில் சுட்டிக்காட்டிய வார்த்தைகளை அப்படியே எடுத்துக் காட்டுவது நலம் என்று கருதுகிறேன்.

"The Planning Commission is aware that we had been amongst the leaders in additional mobilisation during the Fourth Plan. In fact, our efforts in relation to our per capita income, is the highest in the country, and out of a total additional mobilisation of 1058 crores and odd, our State records nearly 159 crores. Unfortunately, the result of this has been that we have suffered at the hands of the Finance Commission, which rewards a State in direct proportion to its revenue gaps."

இப்படியெல்லாம் நம்முடைய குரல்—திட்டக் குழுவானாலும் சரி, அல்லது நிதிக் குழுவானாலும் சரி தயவு தாட்சண்யமின்றித் தட்டிக் கேட்கின்ற முறையில் எழுப்பப்பட்டிருக்கிறது.

மதுவிலக்குப் பற்றியும் இங்கே பேசப்பட்டது. நமது பொன்னப்பநாடார் அவர்கள் இங்கு எடுத்துச் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியின் வேறு சில உறுப்பினர்களும் பூரண மதுவிலக்கு வர வேண்டும் என்றெல்லாம் பேசினார்கள். நாம் இன்றையச் சூழ்நிலையிலேயே 200 கோடி ரூபாயை ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இழக்கிறோம் என்று நிதிக் குழுவினிடத்தில் எடுத்துச் சொல்லியும்கூட, அகில இந்தியாவில் மதுவிலக்கைக் கொண்டு வர வேண்டியது மத்திய அரசு, உத்தமர் காந்தியடிகளின் கொள்கையை அனைத்து இந்தியாவிலும் பரப்புவதற்கு முன்னோடியாக இருக்க வேண்டிய மத்திய அரசு, நாம் எவ்வளவோ சங்கடங்களுக்கிடையே வேறு வழியில்லை என்று மதுவிலக்குக் கொள்கையை ஒத்தி வைத்து, 1·5 ஆண்டுகளில் நாற்பது, ஐம்பது கோடி ரூபாய் அதன் மூலம் மாநிலத்திற்கு வருவாய் தேடி, இப்போது அதையும் இழந்து, வருகிற ஐந்தாண்டுத் திட்டத்திலாவது நிதிக்கமிஷன் நம்முடைய நிலையை எண்ணி உதவிடுவார்களா என்று பார்த்தால் அவர்கள் பார்க்கிற பார்வை ''உன்னை யார் மதுவிலக்கை அமல்படுத்தச் சொன்னது?' என்பதுபோல் இருக்கிறதே தவிர,—அவர்கள் அப்படிச் சொன்னார்களா என்று கேட்பார்கள்—சொல்லவில்லை—பார்

வைக்குப் பொருள் கூறுகிறேன்—சிலபேர் பார்வைக்குப் பொருள் கூறுவது சுலபம்—நிதிக் குழு நாம் எடுத்துக் கொண்ட இந்த முயற்சிக்கு ஓர் அடையாளப் பரிசை அளிக்கின்ற வகையில்கூட சிறு தொகையையும் ஒதுக்கவில்லை என்பது வருந்தத்தக்கது. அதையும் ஆளுநர் அவர்களே தம்முடைய உரையில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

இந்த அவையில் ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் மிக உரமாகப் பேசப்பட்ட விஷயம் உரம். உரம் பற்றி மிக உரமாகப் பேசப்பட்டது. ஆனால் உரம் உரம் என்று இங்கே பேசுகிற நேரத்தில் நாம் கேட்கவேண்டிய வரம் மத்திய சர்க்காரைப் பார்த்து என்பதைப்பற்றி மன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் கூட ஏனோ புரியவில்லை. நமது அருமை நண்பர் ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு மாரிமுத்துகூட உங்களுக்குள்ள அதிகாரத்தை வைத்துக்கொண்டு ஏன் இந்தக் காரியத்தைச் செய்யக்கூடாது என்று கேட்டார்கள்.

உரத்தைப்பற்றிக் கொஞ்சம் கேட்பதில் தொய்வு—சலிப்புத் தட்டினாலும்கூட நான் விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்று கருதுகிறேன். உரம்—வெளிநாட்டில் இருந்து நமக்கு இறக்குமதி செய்யப்படுகிற உரம் பூல் (Pool) என்ற தலைப்பில் வைக்கப் பட்டிருக்கிறது. உள்நாட்டில் தயாரிக்கப்படுகிற உரம் நான்-பூல் (Non-Pool) என்ற தலைப்பில் வைக்கப்பட்டிருக்கிறது. இதை கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இரண்டு பருவங்களாகப் பிரிக்கப்பட்டு, இந்த உரங்கள் மாநிலங்களுக்கு வழங்கப்படுகிறது.. பிப்ரவரி முதல் ஜூலை வரை—காரிஃப் பருவம்—ஆகஸ்ட் முதல் சனவரி வரை ராபி பருவம்—இந்தப் பருவங்களில் வேண்டிய உர ஒதுக்கீட்டை மத்திய அரசே செய்து வருகிறது. ஆறு மாதத்திற்கு ஒரு முறை உரம் ஒதுக்கீடு செய்கிறபோது இறக்குமதி செய்கிற உரத்தை—பூல் இல் இவ்வளவு என்றும், உள்நாட்டு உரத்தை நான்-பூல் இல் இவ்வளவு என்றும் நம்முடைய தேவையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு ஒதுக்கீடு செய்கிறார்கள்.


1973-74-ஆம் ஆண்டுக்கு நமக்குத் தேவையான உரம் மூன்று லட்சத்து ஐயாயிரம் டன்கள். சென்ற ஆண்டு நமக்குத் தேவை இதைவிடக் குறைவுதான். அதற்கு முந்திய ஆண்டும் அதைவிடக் குறைவுதான். உரம் அதிகமாகப் போட வேண்டுமென்ற ஆர்வம் விவசாயப் பெருங்குடி மக்களிடத்தில் வந்திருக்கிற காரணத்தினால், உரத்தின் பயனைப் பத்திரிகையில் எடுத்துச்சொல்லி, வேளாண்மைத் துறை வாயிலாக எடுத்துச் சொல்லி, வானொலி மூலமாக எடுத்துச் சொல்லி வருகின்ற காரணத்தினால், சாகுபடிக்கு புதியதாக ஆயிரக் கணக்கான ஏக்கரா நிலங்கள் கொண்டுவரப்பட்டிருக்கிற காரணத்தினால்—விவசாய மக்களின் தேவை மூன்று லட்சத்து ஐந்தாயிரம் டன்களாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டு உரம் கேட்கப்பட்டது. ஆனால் நமக்கு மொத்தமாகக் கிடைத்தது ஒரு லட்சத்து எண்பதாயிரம் டன்கள்தான். இதை ஒதுக்கியது மத்திய அரசு என்பதை மறந்துவிடக் கூடாது.

திருமதி த. ந. அனந்தநாயகி : கவர்னர் உரையில் இரண்டு லட்சம் சொச்சம் டன்கள் உரம் கிடைத்திருப்பதாகச் சொல்லப் பட்டிருக்கிறதே, இதில் எது சரி? ஏன்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் வெளிநாட்டு உரத்தைப்பற்றி மட்டும் சொல்கிறேன். அது உள்நாட்டு உரத்தையும் சேர்த்து.

இதிலே முக்கியமாகக் குறிப்பிடவேண்டிய ஓர் அம்சம், நமக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்ற வெளிநாட்டு உரம் முழுவதும் (1) தஞ்சாவூர் கூட்டுறவு மார்க்கட்டிங் ஃபெடரேஷன், (2) தமிழ் நாடு கூட்டுறவு மார்க்கட்டிங் ஃபெடரேஷன் ஆகியவைகளின் மூலமாக விநியோகம் செய்கின்ற பொறுப்பை 1-4-1973 முதல் ஒப்படைப்பது என்று முடிவு எடுத்து, வெளிநாட்டு உரப் பூலில் இருந்து ஒதுக்கப்பட்ட உரத்தை தஞ்சாவூர் கூட்டுறவு மார்க் கட்டிங் ஃபெடரேஷன், தமிழ்நாடு கூட்டுறவு மார்க்கட்டிங் ஃபெடரேஷன் ஆகிய இரண்டின் மூலம் விநியோகிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. இதிலே கேட்கப்பட்ட வெளிநாட்டு உரம்—1973 ஜூலை முதல் சனவரி 1974 வரை—ராபி பருவம் ஒரு லட்சத்து எண்பத்தெட்டாயிரம். இவற்றில் கேட்கப்பட்ட வெளிநாட்டு உரம்—ஒரு லட்சத்து ஆறுயிரம் டன்கள். மத்திய அரசு ஒதுக்கீடு செய்தது நாற்பத்தெட்டாயிரத்து எண்ணூற்று முப்பத்தேழு டன்கள். ஒதுக்கப்பட்ட அந்த அளவையாவது கொடுத்தார்களா என்றால் இல்லை அதிலேகூட முப்பத்து மூன்றுயிரத்துத் தொள்ளா யிரத்து ஏழு டன்களே கிடைத்தது. ஒதுக்கீடு செய்ததில் கொடுக்க வேண்டியது பதினாலாயிரதுத் தொள்ளாயிரத்து முப்பது டன் இருக்கிறது.

இந்த 33,907 டன் உரத்தையும் நாம் கூட்டுறவுத் துறையிலே இயங்கி வரும் 3027 கிராமக் கூட்டுறவுக் கடன் வசதி நிறுவனத் தின் மூலமாக விநியோகம் செய்து வருகிறோம். இதற்காக, கார்டு முறைகளை உண்டு பண்ணி விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவருடைய கண்காணிப்பில் உரம் விநியோகம் செய்யப்படு கிறது. இந்தக் கூட்டுறவுக் கடன் வசதி நிறுவனத்தின மூலம் விநியோகிப்பத்தில் ஓரிரு இடங்களில் தவறு நடைபெறவில்லை யென்று நான் சொல்லமாட்டேன். ஆனால், எல்லா இடங்களிலும் தவறு நடைபெறுவதாகச் சொல்லக்கூடாது. ஒரு இடத்திலே தவறு நடைபெற்றால் போதாதா, ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷம் போதாதா என்று கேட்கலாம். அந்த எடுத்துக்காட்டு இதற்குப் பொருந்தாது. ஏனென்றால் வைக்கப்பட்டிருப்பது பல குடம் பால்கள், ஆனால் ஒரு குடம் பாலில் விஷம் விழுந்துவிட்டது என்பதற்காகப்பல குடம் பாலையும் தூக்கி எறிந்துவிட முடியாது. அந்த வகையிலே, இன்றைக்கு ஆயிரக்கணக்கான இடங்களில் உர விநியோகம் செய்யப்படுகிற நேரத்தில் ஒன்றிரண்டு இடங்களில் ஏற்படுகிற தவறுகளைக் கொண்டு ஏதோ கூட்டுறவுத் துறையே மோசமாக இயங்குகிறது, அதிலே எல்லா இடங்களிலும் ஊழல் நடைபெறுகிறது என்று நாம் கற்பனை செய்து கொள்வது நல்ல தல்ல.




**ஒரு குடம் பாலில் விஷம் விழுந்து விட்டது என்பதற்காகப் பல குடம் பாலையும் தூக்கி எறிந்துவிட முடியாது.**

உள்நாட்டு உரத்தைப் பொறுத்த வரையில், நம் மாநிலத்திற்கு ஒவ்வொரு பருவத்திற்கும் ஒதுக்கப்படுகின்ற பங்கீட்டில் 66 சதவீதம்—மாண்புமிகு உணவு அமைச்சர் அன்றைக்கு எடுத்துச் சொன்னதைப்போல்—தனிப்பட்ட உரத் தொழிற்சாலைகளின் ஏஜெண்டுகளால் இயங்கி வருகின்ற 6428 சில்லறை விற்பனைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. இப்படி உள்நாட்டு உரம், கடந்த ராபி பருவத்தில் மத்திய அரசு நமக்கு ஒதுக்கியது 69,000 டன். அதிலே நமக்குக் கிடைத்தது 45,278 டன். இன்னும் ஒதுக்கீடு செய்யப்பட்டுக் கொடுக்கப்படாதது 24,000 டன். நமக்குக் கிடைத்த 45,278 டன்னில் 66 சதவீதம், அதாவது 3-ல் 2 பங்கு தனியார் சில்லறை விற்பனைக் கடைகளுக்குப் போகிறது. அதில், 45,000 டன்னில் 3-ல் 2 பங்கு, 66 சதவீதம் பங்கு, 'தனியார் சில்லறை விற்பனை நிலையங்களுக்குச் செல்கிறது. அவர்கள் ஒழுங்காகவும், நியாயமாகவும் விற்பனை செய்கிறார்களா என்பதைக் கண்காணித்து அவர்கள் மீது தீவிர நடவடிக்கை எடுக்கின்ற அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை. அன்றைக்கு திரு மாரிமுத்து அவர்கள் கேட்டார்கள், மாநில அரசுக்கு அதிகாரம் இல்லையா என்று! மாநில அரசுக்குச் சில அதிகாரங்கள் இருக்கின்றன. நான் அவைகளை இங்கே கோடிட்டுக் காட்டிட விரும்புகின்றேன். ஆனால் தீவிர

நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் எதுவும் மாநில அரசுக்கு இல்லை. இங்கே ரூ. 55-க்கு விற்க வேண்டிய உரம் ரூ. 110-க்கு விற்கிறது, ரூ. 135-க்கு விற்கிறது, ரூ. 150-க்கு விற்கிறது என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். தனியார் மூலமாக விநியோகிக்கப்படுகிற உரங்கள் அப்படி விற்கப்படுகிறது. அவைகளைக் கண் காணித்து, தீவிர நடவடிக்கை எடுக்க நம்மால் இயலாது என்று எடுத்துக் கூறி 19-11-1973-ல் தமிழ்நாட்டு அரசாங்கத்தின் சார்பில் நீண்ட கடிதம் ஒன்றை மத்திய அரசுக்கு எழுதினோம். அதைப் படித்து விட வேண்டுமென்று நான் உள்ளபடியே விரும்புகிறேன். ஏனென்றால், நாம் முயற்சியை மேற்கொள்ளுகிறோமா இல்லையா என்பதை எடுத்துக் காட்டுவதற்காக.

"The entire pool stocks of fertilisers are now being distributed only through the two Co-operative Federations functioning in this State, namely, the Tamil Nadu Co-operative Marketing Federation Limited, and the Thanjavur Co-operative Marketing Federation Limited. These Federations will distribute the fertilisers secured by them, only on the strength of the identity cards, issued to the ryots ; and such a course, is expected to minimise any malpractices on the part of the Co-operatives. But, it has been found difficult to exercise an effective check on the distribution of non-pool stocks by the private dealers, who get their supplies, from the Marketeers of the indigenous manufacturers, resort to all sorts of malpractices such as black-marketing, transporting outside the State, etc. Such malpractices are on the increase day by day especially in respect of Urea, which is in great demand. Unless the State Government are equipped with the necessary powers to requisition stocks from the Producers and Private dealers in an emergent situation, when such a course is warranted, it may prove difficult to ensure a proper distribution of non-pool fertilisers and thereby meet the seasonal demands of the ryots, at the right time, and at the notified prices. Section 3 of the Essential Commodities Act, 1955, enables the Central Government to control the price, to regulate supply etc. Section 5 of the Act deals with the delegation of these powers to the State Government."

அந்த செக்ஷன் 5 அடிப்படையில் மாநில அரசுக்கு அதிகாரங்கள் தரவேண்டுமென்று கடிதம் எழுதினோம். அதற்கு மத்திய அரசிடமிருந்து 7-1-1974-ல் கடிதம் வந்தது. அதிலே என்ன சொன்னார்கள்? 1966-ஆம் ஆண்டிலேயே மத்திய மந்திரி சபை எடுத்த முடிவின்படி தனியார் உர உற்பத்தி ஆலைகள் உரங்கள் விற்கின்ற உரிமையைப் பெற்றிருக்கிறார்கள் என்றும் அவர்கள் தொழிலுக்கு வேண்டிய பணத்தைப் பெறுவதற்கு இதை ஒரு வாய்ப்பாக வைத்திருக்கிறார்கள் என்றும் மத்திய அரசு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்கள். அதை ஆங்கிலத்தில் சொல்கிறேன்.

" In this connection, another point that has to be reckoned with is, that under 1966 decision of the Cabinet, private manufacturers have been given freedom of marketing, in order to invite more capital into the industry . . .We feel that all this and vigorous action under the Fertiliser (Control) Order will be sufficient to deal with most of the malpractices at present. The Government of India regret their inability to agree to your request to delegate powers of requisition and distribute fertilisers held with private manufacturers."

திரு கே. டி. கே. தங்கமணி : இப்பொழுது , பூல் ஸ்டாக் வெளிநாடுகளிலிருந்து வருகிறதே அவை பூராவற்றையும் சர்க்கார் விநியோகம் பண்ணுகிறதா அல்லது அதிலும் ஏதாவது பிரைவேட் ஆட்களுக்குக் கொடுக்கின்றோமா என்பதை அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில், நான்பூல் ஸ்டாக்ஸ் அவர்கள் சொன்னார்கள் என்று நினைக்கிறேன், இப்பொழுது நான் பூல் ஸ்டாக் சம்பந்தமாகக் கூட, மாநில அரசே விலை பிக்ஸ் பண்ணி, அந்த விலைக்கு அதிகமாக விற்றால் நடவடிக்கை எடுக்கிறார்களே, மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களிலே, அது எவ்வாறு சாத்தியம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வெளிநாடுகளிலிருந்து வருகிற உரத்தைப் பொறுத்த வரையில் நான் ஏற்கெனவே சொன்னேன். அது சர்க்கார் மூலமாகத்தான் விநியோகிக்கப்படுகிறது—பூலில் தான். உள்நாட்டு உரம் என்றால்தான் நான்-பூலில் இருக்கிறது. இப்பொழுது இருக்கிற சட்டத்தையே பயன்படுத்திக் கொள்ளலாம், மற்ற மாநிலத்தில் பயன்படுத்தப்படுகிறதே என்று திரு தங்கமணி அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது இருக்கிற பெர்டிலைசர் கண்ட்ரோல் ஆர்டர் 1957-இன்படி என்ன செய்யலாம் என்றால், கடைகளில் நுழைந்து தஸ்தாவேஜ்களைக் கைப்பற்றி ஒழுங்காகக் கணக்கு வைத்திருக்கிறார்களா என்று சரி பார்க்கலாம். உரத்தில் கலப்படம் இல்லாமல் தரத்தின்படி அவைகளை விற்கிறார்களா என்று கண்காணிக்கலாம். அவர்கள் ஒழுங்காக விவசாயிகளுக்கு விநியோகிக்கிறார்களா என்று கண்காணிக்கலாம். இந்த அதிகாரம் மாவட்ட வேளாண்மைத் துறை அதிகாரிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் தனியார் துறையிலுள்ள சில்லறை விற்பனைக் கடைகளின் மீது இந்நடவடிக்கைகளை எடுக்கலாம். ஆனால், நான் மேலே சொல்லியிருக்கிற அந்த 3 தலைப்புகளில் ஏதாவது குறைகள் இருக்குமேயானால் அவர்கள் மீது எப்படி நடவடிக்கை எடுக்க முடியும் என்றால் உரத்தைப் பறிமுதல் செய்யவோ, மற்றும் நாம் கார்டுகளைக் கொடுத்த விவசாயிகளுக்கு விநியோகம் செய்யுங்கள் என்று சொல்லவோ நிச்சயமாக நமக்கு அதிகாரம் கிடையாது. அது மாத்திரமல்லாமல், இன்று சில்லறை விற்பனையாளர்களுடைய கடைகளுக்குச் சென்றுதான் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியுமே அல்லாமல், அவர்கள் தவறு செய்கிற நேரத்தில் கூட்டுறவுத் துறையின் மூலமாக, அந்த விநியோகத்தைச் செய்கிற உரிமையை அளிக்க இப்பொழுதுள்ள சட்டத்தின்படி



அதிகாரம் கிடையாது. அது மாத்திரமல்ல, சில்லறை விற்பனையாளர்கள் மீது வழக்குகளைப் போடலாம், இரசாயன உரத்தை உற்பத்தி செய்கின்ற உரத் தொழிற்சாலையில் நுழைந்து அவர்களிடத்தில் உள்ள இருப்புகளைக் கேட்கவோ, கலப்படம் செய்கிறார்களா என்று பார்க்கவோ அதிகாரம் கிடையாது. ஆகவே தான் அந்த அதிகாரத்தை எங்களுக்குத் தாருங்கள் என்று கேட்கிறோம். மற்ற மாநிலங்களில் நடவடிக்கை எடுப்பதுபோல், இங்கேயும் இருக்கிற அதிகாரங்களை வைத்து எடுக்கக் கூடாதா என்று கேட்பீர்கள். பெர்ட்டிலைசர் கன்ட்ரோல் ஆர்டரின்கீழ் நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். 1971—72-ல் 96 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன ; 1972—73-ல் 243 ; 1973—74-ல் (30—11—1973 வரை) 179 வழக்குகள் இப்போது பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. நாம் நடவடிக்கை எடுக்காமல் இல்லை. ஆனால், தீவிர நடவடிக்கை எடுப்பதற்கு நாம் அதிகாரம் கேட்டதற்கு, அவர்கள் 1966-லேயே முடிவு எடுத்து விட்டோம். தொழிற்சாலைகள் தொழில் நடத்தப் பணம் வேண்டுமென்பதற்காக அந்த வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்று அவர்கள் நமக்குக் கறாராகப் பதில் எழுதி விட்டார்கள் என்பதை இந்த அவைக்குச் சொல்வதை என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

தேவையான உரத்தைக் கேட்டால் நமக்குத் தருவதாகச் சொல்வதும் பாதி; பிறகு, சொன்னதிலே நமக்குக் கிடைத்ததும் மிகவும் குறைவு. கொடுக்கக்கூடிய குறைவான இரசாயன உரத்தையும்—உள்நாட்டு இரசாயன உரத்திலே—66 சதவீதத்தை தனியார் ஏஜெண்டுகள் மூலமாகத்தான் விநியோகிக்கவேண்டும். அந்தக் கொள்கை மாற்றப்பட்டாக வேண்டும். இந்தக் கொள்கை மாற்றப்படுமானால் இப்பொழுது கிடைக்கின்ற உரத்தை விநியோகிக்க நம்மால் நிச்சயமாக முடியும். ஒரு குறுக்குக் கேள்வி

எழும். இதற்கு முன்னே அரசாங்கச் சார்பில் விநியோகிக்கும் போது கூட்டுறவுச் சங்கங்களில் தவறுகள் நடைபெறவில்லையா என்று. அது எரோரிடத்தில் நடைபெற்றாலும் அவை உடனடியாக நடவடிக்கைகளுக்கு ஆளாகின்றன என்பதையும் நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய ஜோதி அம்மையார் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே சில முக்கியமான பிரச்சினைகளை இங்கே எழுப்பினார்கள். அதிலே மிக முக்கியமாக சிறுவாணித் திட்டத்தைப் பொறுத்த வரையிலும் எப்படி ஒப்பந்தம் செய்திருக்கிறீர்கள், ஏனென்றால் ஏற்கெனவே மிகப் பயங்கரமாக விதிகளைப் போட்டார்கள், இப்பொழுது எவ்வாறு ஒப்பந்தம அமைந்திருக்கிறது என்று கேட்டார்கள். சில பேர் கோயம்புத்தூர் தேர்தலுக்காக சிறுவாணித் திட்டம் வருவதாகச் சொன்னார்கள். அவர்களுக்கு எல்லாம் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், 10—5—1969-ல், நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதும் நானும் நண்பர் மதி அவர்களும், திருவனந்தபுரத்திற்குச் சென்று அங்கே திரு இ.எம்.எஸ். அவர்களோடு—அவர் அப்பொழுது முதலமைச்சராக இருந்தார்—பேச்சு வார்த்தைகளை நடத்தி அதன் தொடர்பாகப் பல கட்டங்களில் பேச்சு வார்த்தை நடைபெற்று நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் கேரள மாநிலத்து அமைச்சர்களுக்குமிடையே பேச்சுகி வார்த்தை நடைபெற்று, 19—8—1973-ல் இரு அரசுகளுக்கிடையே நல்ல ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தினுடைய ஷரத்துக்கள் என்ன என்ன என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்

(1) கோயம்புத்தூர் நகராட்சி, நகருக்கும் அதனை அடுத்து உள்ள பகுதிகளுக்கும் தேவைப்படும் குடிநீரினை வழங்குவதற்காக ஒவ்வொரு ஆண்டும் சிறுவாணித் திட்டத்திலிருந்து 1,300 மில்லியன் கன அடிக்கு மேற்படாத நீர் (சராசரியாக அன்றாடம் வழங்கப்படும் நீர் அளவு 223 இலட்சம் காலன்) திருப்பி விடப்படும். இதில் வீடு, சமுதாயம், தொழிற்சாலை தேவைகளுக்கு நீர் வழங்கப்படுவது அடங்கும், ஆனால் பாசனத்திற்கு நீர் வழங்கப்படுவது அடங்காது.

(2) இந்த அணை, தமிழ்நாடு அரசின் செலவில் கேரள அரசால் கேரளப் பகுதிக்குள்ளேயே கட்டப்பட்டுப் பாதுகாத்து வரப்படும்.

(3) நீர்த் தேக்க நீரை முறைப்படுத்தி வழங்கும் வகையில் இவ்விரண்டு அரசுகளையும் சேர்ந்த அதிகாரிகளைக் கொண்ட கூட்டுக் கட்டுப்பாட்டுக் குழு ஒன்று செயல்படும்.

(4) இந்த அணையை ஏறத்தாழ நான்காண்டு கால அளவில் முடிப்பதற்கு இயன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் தீவிரமாக மேற்கொள்ள கேரள அரசு ஒப்புக்கொண்டுள்ளது.




(5) இந்த ஒப்பந்தம் 99 ஆண்டுக் காலத்திற்கு முழுமையாகச் செயலில் இருந்து வரும். இது தமிழ்நாடு அரசின் விருப்பத்தின் பேரில், இரு தரப்பாரும் ஏற்றுக்கொள்ளும் அடிப்படையில் புதுப்பிக்கப்படத் தக்கதாகும்.

(6) இவ்விரு தரப்புககளுக்குமிடையே எச்சமயத்திலும் தோன்றக் கூடிய ஒரு தகராறு, ஐயப்பாடு, கருத்து வேற்றுமை, அல்லது பிரச்சினைகள் நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விடப்படும்.

இப்படிப்பட்ட நல்ல முறையிலே இரண்டு அரசுகளுக்கும் எந்த விதமான பாதகமும் ஏற்படாமல் சுமுகமான முறையிலே இந்த ஒப்பந்தம் ஏற்பட்ட காரணத்தால், திரு அச்சுதமேனனும், நானும், நம்முடைய அமைச்சர் பெருமக்களும் கோயம்புத்தூரிலே திறப்பு விழாவிற்குச் சென்றபொழுது சிறுவாணித் திட்ட விழாவில், மக்கள் பாராட்டைப் பெற்று நடைபெற்ற அந்த விழாவில் கேரளமும் தமிழ்நாடும் மற்றும் பக்கத்திலே பக்கத்திலே இருக்கின்ற மாநிலங்கள் ஒன்றுக்கொன்று எவ்வாறெல்லாம் உள்ளனவென்பதை எடுத்துக் காட்டுகின்ற முறையிலே கேரளத்திற்கு ஒரு ஆண்டிற்கு 15 ஆயிரம் டன் அரிசி வழங்கத் தயாராக இருப்பதாக—பேரம் அல்ல—சொன்னேன். திரு அச்சுத மேனன் பேசுகின்ற நேரத்திலே தமிழகத்திலே மின்சாரப் பற்றுக்குறை வருகிறபோது மின்சாரம் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று எடுத்துச் சொன்னார்கள். குடியரசு நாள் விழாக் கூடக் கொண்டாட முடியாத நிலையில் உள்ள குஜராத்திற்கு உணவு வழங்கினோம், கர்நாடகத்திற்கு உணவு வழங்கினோம், மராட்டியத்திற்கு உணவு வழங்கினோம், மேற்கு

வங்கத்திற்கு உணவு வழங்கினோம், பல்வேறு மாநிலங்களுக்கு உணவு வழங்கி வருகிறோம். அப்படி வழங்கிக் கொண்டிருக்கும் பொழுதே இடையில் ஓர் உத்தரவு வந்தது; எங்களைக் கேட்காமலேயே மத்திய அரசின் வாயிலாக அல்லாமல் மாநிலங்கள் அவர்களுக்குள்ளே உணவு வழங்குவதைப் பற்றி மத்திய அரசிடமிருந்து கட்டளை வந்தது. அவற்றையெல்லாம் சொன்னால் மாநில சுயாட்சி வாதம் ஆரம்பமாகிவிடும். நம்முடைய பெரியவர் திரு மணலி அவர்கள் அதற்காக இரண்டு, மூன்று நாட்கள் தனியாக ஒதுக்கி விவாதிக்கலாம் என்றார்கள், ஆகவே அதை நான் இப்ப விவரிக்கவில்லை.



**மேற்கு வங்கத்துக்கு உணவு**

**திருமதி த. ந. அனந்தநாயகி** : மற்ற மாநிலங்களுக்கு உணவு கொடுப்பதை நான் பாராட்டுகிறேன். உணவு வழங்குகிற முறையிலே அரசாங்கமே நெல்லை புரக்யூர் செய்து கொடுக்கிறார்களா? அல்லது தனி வியாபாரிகள் இங்கே வந்து கொள் முதல் செய்வதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கிறார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : எஃப். சி. ஐ. மூலமாகத்தான் வழங்கப்படுகிறது.

**திரு கே. டி. கே. தங்கமணி** : மத்திய அரசு அந்தத் தடையை நீக்கிவிட்டதாகச் சொல்லப்படுகிறதே, அப்படிப் பத்திரிகைகளிலேயெல்லாம் வந்ததே அது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்தத் தடை நீங்கியதாகத் தெரியவில்லை. அம்மையார் அவர்கள் மாநில அரசுகளுக்கு உணவு வழங்குவதைப் பாராட்டுகிறேன் என்று சொன்னார்கள். அதோடு அடுத்த வார்த்தையையும் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். அப்படி உணவு வழங்குவதைத் தடுப்பதைக் கண்டிக்கிறேன் என்று சொல்லியிருந்தால் நான் மகிழ்ச்சியடைந்திருப்பேன், பரவாயில்லை, அவர்களை நான் அந்த ஆபத்திலே சிக்கவைக்க விரும்பவில்லை. குஜராத்திலே உணவுப் பஞ்சம் ஏற்பட்டு அங்கே இதுவரையிலும் 30, 40 பேர்கள் போராட்டத்திலே இறந்திருக்கிறார்கள் என்று அரசாங்கம் தருகிற கணக்குப்படி ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளிலே வருகின்ற குறிப்புப்படி தெரிகிறது. தமிழ்நாட்டிலே விவசாயிகள் போராட்டத்திலே 20 பேர்கள் இறந்தபொழுது பிரதம மந்திரி அவர்கள் தமிழக அரசின் அணுகுமுறை சரியாக இல்லை என்று சொன்னார்கள். குஜராத்தின் அணுகுமுறை தமிழக அரசிற்கு வரவேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுதுகூட தமிழக அரசின் சார்பில் குஜராத்தின் கஷ்டத்தைப் போக்க நம்மால் முடிந்த அளவுக்கு அரிசி அளிப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதை நான் ஆளுநர் உரை விவாதத்தின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். பட்டினிப் போராட்டம் காந்தி பிறந்த மாநிலத்திலேயே நடைபெறுகிறது என்பதாலும், இந்தியாவிலேயே இந்தப் போராட்டத்தின் மூலம் குடியரசு நாள்விழாக்கூடக் கொண்டாட முடியாத மாநிலமாக இருக்கிறது, குடியரசு நாளிலே கூட துப்பாக்கிச் சூடுகள் ஓயவில்லை என்ற நிலைமை இருக்கிற மாநிலமாக இருக்கிறது என்பதாலும் மனிதாபிமான உணர்வோடு திராவிட முன்னேற்றக் கழக அரசு இயன்ற உதவியை குஜராத் மாநிலத்திற்குச் செய்வதற்குத் சித்தமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சில குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன. எல்லாக் குற்றச்சாட்டுகளுக்கும் பதில் அளிக்க விரும்பவில்லை. ஏனென்றால் பல தவறுகளுக்கு வழக்கு போடப்படவில்லை. போலீசார் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னார்கள். நான் விசாரித்துப் பார்த்ததில் வழக்குகள் போடப்பட்டும் அல்லது போலீசார் புலனாய்வு நடைபெறுகின்றன என்றும் செய்திகள் வருகின்ற காரணத்தினால் அவைகளுக்கு எல்லாம் நான் விரிவான விளக்கங்கள் சொல்ல விரும்பவில்லை, நேரம் போதாத காரணத்தினால். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிற எந்தப் புகாராக இருந்தாலும் எந்த அதிகாரி மீது சொல்லி இருந்தாலும் சரி, வேறு யார் மீது சொல்லியிருந்தாலும் சரி, இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை திரைப்படக் கல்லூரி பற்றிப் பேசப்பட்டது. ஏதோ அந்தக் கல்லூரிக்கு 60 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டதாகவும் அந்த 60 இலட்சம் எங்கே போனது என்பதாகவும் கேள்வி எழுந்தது. பத்திரிகைகளில் வருகின்ற செய்திகளை மாத்திரம் வைத்துக் கொண்டு குற்றச்சாட்டுகளிலே நுழைவது சரியல்ல என்பதை

எனது அன்பிற்கும், மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏதோ 60 இலட்சம் அப்படியே கொடுக்கப்பட்டு ஏப்பம் விடப்பட்டது போல, எங்கே சென்றது என்ற கேள்விகளை எழுப்புவது முறையா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். 60 இலட்ச ரூபாய்க்கு ஒரு மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட்டது. அந்த மாஸ்டர் பிளான் மூலமாக ஐந்தாண்டுக் காலத்திலே திரைப்படப் பிரிவின் வளர்ச்சிக்காக 60 இலட்சம் ரூபாய் செலவழிக்கலாம் என்று திட்டமிடப்பட்டது. இது அன்னியில் பட்ஜெட் மூலமாக அந்தத் திரைப்படக் கல்லூரிக்கு ஒதுக்குவது வேறு. இந்த 60 இலட்சம் ரூபாய் மாஸ்டர் பிளான் என்ற அடிப்படையிலே ஒதுக்கப்பட்டது. 1970—71-ஆம் ஆண்டில் திரைப்படக் கல்லூரிக்குக் கருவிகள் வாங்க ரூபாய் 1,89,000, மாணவர்கள் படம் எடுக்க 18,000 செலவழிக்கப்பட்டது. 1971—72-ஆம் ஆண்டில் திரைப்படக் கருவிகள் வாங்க ரூபாய் 39,000, மாணவர்கள் படம் எடுக்க ரூபாய் 38,000, கட்டடங்கள் கட்ட ரூபாய் 28,000 செலவழிக்கப்பட்டது. 1972—73-ஆம் ஆண்டில் கருவிகள் வாங்க ரூபாய் 2,66,000, மாணவர்கள் படம் எடுக்க 58,000 ரூபாய், கட்டடங்கள் கட்ட 6,00,000 ரூபாய் செலவழிக்கப்பட்டது. இப்பொழுதுதான் நாங்கள் சென்று அந்தக் கட்டடங்களைத் திறந்துவைத்தோம். 6 இலட்ச ரூபாய்க் கட்டடம். ஆகவே 1970—1971-ஆம் ஆண்டு முதல் 1973—1974-ஆம் ஆண்டு வரையிலே கருவிகள் வாங்குவதற்காக 4,94,000 ரூபாயும், மாணவர்கள் படம் எடுக்க 1,14,000 ரூபாயும், கட்டடங்கள் கட்டுவதற்கு ஆக 11,11,000 ரூபாயும் ஆக மொத்தம் 17 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய்தான் செலவிடப்பட்டிருக்கிறது. ஆனால் 60 இலட்சம் எங்கே என்றும் கருணாநிதி பாக்கெட்டிலே போட்டுக் கொண்டாரா? வீடு கட்டிக்கொண்டாரா? எங்கே சென்றது? யார் எடுத்துக் கொண்டார்கள் என்றெல்லாம் கேட்பது சரியல்ல. 60 இலட்ச ரூபாய் திட்டத்தில் 17 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் தான் செலவிடப்பட்டிருக்கிறது. மாணவர்கள் சில கோரிக்கைகளை எழுப்பினார்கள். திரு கே. டி. கே. அவர்கள் கேட்டதற்கு அன்றைக்கே நான் விளக்கங்களைச் சொல்லியிருக்கிறேன். வெளிநாட்டிலிருந்து ஒரு கருவி 12 இலட்ச ரூபாய் மதிப்புள்ள கருவி, திரைப்படக் கல்லூரிக்கு வேண்டியிருக்கிறது. அதற்காக அந்நியச் செலாவணி கேட்டு நான் மத்திய அரசுக்கு எழுதி சுமார் 3 நாட்கள் அல்ல, மூன்று வாரங்கள் அல்ல, மூன்று மாதங்கள் அல்ல, மூன்று ஆண்டுக்காலம் ஆகி அனுமதி மத்திய சர்க்காரிடமிருந்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். திரைப்படம் கல்லூரிக்கு 12 இலட்ச ரூபாய்க்குக் கருவி வாங்குவதற்காக அந்நியச் செலாவணி கேட்டு நாம் அனுப்பியுள்ள விண்ணப்பம் மத்திய அரசிடம் தேங்கிக் கிடக்கிறது. ஆகவே மாணவர்களுடைய தேவையை நாம் நிறைவு செய்ய முடியாமல் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரகண்ட நல்லூரைப் பற்றி நம்முடைய நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்பொழுது கூறினார்கள். எந்த நட

வடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். நான் அதிகமான விவரங்களுக்குள் செல்ல விரும்பவில்லை. ஆனாலும் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று எடுத்துக் காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். 1972 ஜூன் மாதத்தில் அரகண்டநல்லூரைச் சேர்ந்த திரு ஷேக் ராவுத்தர் என்பவர் வெளி நெல்லை வாங்கி அரிசியாக்கும் முகவராக—ஏஜெண்டாக—நியமிக்கப்பட்டார். 1972 டிசம்பரில் நெல் மூட்டைகள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டதாகக் கூறினார். பிறகு, அவர் கொடுத்த செய்தி பொய் என்று தெய்வசிகாமணி என்பவர் கடிதம் எழுதினார். உடனடியாக அதை கலெக்டருக்கு அனுப்பி விசாரிக்கச் சொன்னேன். 1973 சனவரி மாதம், அவர் கொடுத்த செய்தி பொய் என்று தெரிய வந்தது. பிறகு, மார்ச் திங்களில் கோட்டாட்சித் தலைவர்—ஆர்.டி.ஓ.—விசாரணை செய்தார். பிறகு மே மாதம் 2-ஆம் தேதி தாலுக்கா சப்ளை அதிகாரி காந்த ராஜ் சஸ்பெண்டு செய்யப்பட்டார். தாசில்தார் அஜீஸ் கான் மே மாதம் 6-ஆம் தேதி சஸ்பெண்ட் செய்யப்பட்டார். ஜூன் மாதம் மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கையின் பேரில் உணவுத் துறைக்கும், காவல் துறைக்கும் விசாரணை செய்ய ஒப்படைக்கப்பட்டது. ஜூலை மாதத்தில், வருவாய் வசூல் சட்டத்தின் கீழ் அரசுக்கு ஏற்பட்ட இழப்புத் தொகையை ஏன் வசூல் செய்யக் கூடாது என்று மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து ஷேக் ராவுத்தருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. பிறகு ஆகஸ்டு மாதம் ஷேக் ராவுத்தர் கைது செய்யப்பட்டு பின்பு ஜாமீனில் வெளியே வந்தார். அதே ஆகஸ்டு மாதம் 17-ஆம் தேதி அவர் மேல் சிவில், கிரிமினல் நடவடிக்கை எடுப்பதை உயர் நீதி மன்றம் தடை செய்தது. அப்படித் தடை உத்தரவு வந்த பிறகும் வாளாவிருக்கவில்லை.

17—8—1973 அன்று ஷேக் ராவுத்தரிடமிருந்து பாக்கி வசூல் செய்வதை உயர்நீதிமன்றம் தற்காலிகமாகத் தடை செய்துவிட்டபடியால், மேற்படி ஷேக் ராவுத்தரின் தாவர, ஜங்கம சொத்துக்களை ''கிரிமினல் லா அமெண்ட்மென்ட் ஆர்டினன்ஸ்'' ஆக்டின்படி ஜப்தி செய்ய அனுமதி கோரி மாவட்ட நீதி மன்றத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவரை மனுச் செய்து கொள்ளும்படி அரசு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணையிட்டிருக்கிறது. ஆகவே, இது தொடர்பாக இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கம்பத்தில் ஏதோ போலீசார் கள்ள நோட்டைப் பிடிக்கும் விவகாரத்தில் கேரள அரசோடு ஒத்துழைக்கவில்லை என்பதாக 'மலையாள மனோரமா' என்ற பத்திரிகையில் தகவல் வந்ததாக கம்பம் கோபால் அவர்கள் குற்றச்சாட்டைச் சொன்னார்கள். இதிலே உள்ள விசித்திரம் என்னவென்றால், கம்பத்திலேயிருந்த போலீசார் தீவிரமாக ஒத்துழைத்தார்கள் என்பதுதான் உண்மை. 1—12—1973-ஆம் தேதியன்று கேரள போலீசைச் சேர்ந்த அதிகாரிகள் இந்தக் கள்ளநோட்டு வழக்கில் சம்பந்தப்பட்ட சில நபர்களைப் பிடிப்பதற்காக கம்பத்திற்கு வந்திருந்தார்கள். அது

சமயம் தமிழ் நாட்டுப் போலீசார்—அவர்களுக்கு ஏற்கெனவே கிடைத்த தகவலின் பேரில் இந்தக் கள்ள நோட்டு வழக்கில் சம்பந்தப்பட்டவர்களையும், அச்சடித்த செந்தாமரை அச்சகத்தையும் கண்காணித்து வந்தார்கள். போலீசிலே ஒற்றர் முறை என்று உண்டு. சிலரோடு அணுகியே ஆராய்வார்கள். இப்படி அணுகியிருந்த நேரத்தில் இவர்களையும் குற்றவாளிகள் என எண்ணிவிட்டார்கள். இது இவர்களுடைய திறமையைக் காட்டுகிறது. அது அவர்கள் உணர்ந்ததைக் காட்டுகிறது. 1-ஆம் தேதி கைது செய்ய வேண்டுமென்று வந்தார்கள். நமது போலீசார் 6-ஆம் தேதி குற்றவாளிகளைக் கண்டுபிடித்துக் கைதுசெய்து, அச்சு இயந்திரத்தைக் கைப்பற்றி வழக்கும் பதிவு செய்யப்பட்டது. எனவே, 1-ஆம் தேதி கேரள போலீசார் வந்தார்கள், 6-ஆம் தேதி குற்றவாளிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். பிறகு 20 ஆம் தேதியோ 18-ஆம் தேதியோ ஆனால் அந்தப் பத்திரிகையில் இப்படிப்பட்ட ஒரு செய்தி வநது, அதில் இங்கேயுள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியால் ஒரு செய்தி திரித்துக் கூறப்பட்டிருக்கிறது.

ஆனால் முழுக்க முழுக்க, வழக்கிலே சம்பந்தப்பட்ட அனைவரும் நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. அவர்களெல்லாம் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். விஸ்தாரமான, பெரிய திட்டம் கேரளாவிலேதான் போடப்பட்டதாகத் தகவல் வந்திருக்கிறது. ஏற்கெனவே கள்ள நோட்டு வழக்கில் சம்பந்தப்பட்டு, தண்டனை பெற்று அந்த வழக்கு உயர் நீதிமன்றத்தில்

## குசராத்துக்கு உணவு



அப்பீலில் இருக்கும்போது அந்த வழக்கில் சம்பந்தப்பட்ட விரோதிகள் மறுபடியும் கள்ள நோட்டு அச்சடிக்கச் சதி செய்திருக்கிறார்கள். தண்டித்தால் ஒரே தண்டனையாக வரட்டும் என்ற எண்ணமோ என்னவோ தெரியவில்லை. அதற்குத் தேவையான அச்சு இயந்திரம் மற்றும் உபகரணங்களைக் கேரளத்தில் இருந்து கொண்டு வந்து மறுபடியும் அச்சடித்திருக்கிறார்கள். இந்தச் சதி நடந்த விரிவான ஏற்பாடுகளைப் பற்றி மேற்கண்ட பத்திரிகையோ, துண்டுப் பிரசுரமோ குறிப்பிடாதது மிகவும் வருந்தத் தக்கது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கேரளத்திலேயும், தமிழ்நாட்டிலேயுள்ள சில பத்திரிகைகளைப்போல் ஒரு பத்திரிகை இருப்பதற்காக வருந்துகிறேன். ஒருவேளை தவறாக-அந்தப் பத்திரிகைக்குத் தவறான தகவல் கொடுக்கப்பட்டிருக்குமேயானால் ''மலையாள மனோரமா'' என்ற அந்தப் பத்திரிகை தன் தவற்றைத் திருத்திக்கொள்ளும் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, திரு எட்மண்ட் அவர்கள் நெல்லையில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்காக வாங்கப்பட்ட நிலத்தைப்பற்றிக் கூறினார்கள். அன்றைக்கே நான் சொன்னேன், 3 ஏக்கர் 3 இலட்சம் என்று சொல்லி விட்டுவிடக்கூடாது என்று. ஏக்கர் என்றால் எவ்வளவு, அதற்கு எத்தனை கிரவுண்டுகள், எத்தனை செண்டு என்ற அந்தக் கணக்கைப் பார்க்காமல் 3 ஏக்கர் 3 இலட்சம் என்று சொல்வது நல்லது அல்ல. அப்படி அந்த இடத்திலே வாங்கப்பட்டது என்றால், அது எவ்வளவு மையமான இடம், பக்கத்து நிலத்தின் விலை என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் சொன்னார்கள், ஒரு ஏக்கர் நிலம் 10,000 ரூபாய்க்கு மேல் விலை போகாது. ஆக ரூ. 30,000 ரூபாய்க்கு வாங்கக் கூடிய நிலத்தை 3 இலட்சம் ரூபாய்க்கு வாங்கியிருக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்கு பாளையங்கோட்டை நகரில் டி.எஸ். எண். 723/1ஏ, 723/2, 724/1 ஆகிய சர்வே எண்களில் அடங்கியுள்ள 3 ஏக்கர் 39 செண்ட் நிலத்தை கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் அலுவலகம் கட்டுவதற்கும், பணிமனை கட்டுவதற்கும் வாங்க உத்தேசித்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நிலத்தினுடைய மதிப்பைத் தெரிவிக்குமாறு கடிதம் எழுதப்பட்டது. 724/1 சர்வே எண்ணில் ஒரு கட்டடம் உள்ளது என்பதையும் நம்முடைய திரு எட்மண்ட் அவர்கள் மறந்துவிட்டு ஒரு தவறான தகவலைக் கூறினார்கள். இவ்வளவு சம்பிரதாயங்களுக்குப் பிறகு விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. வெறும் நிலம் மட்டுமல்ல, ஒரு கட்டடமும் இருக்கிறது. அந்தக் கட்டடத்திற்குப் பொதுப்பணித் துறையின் மதிப்பு ரூ. 50.000. விற்பவர்கள் இலட்சம் ரூபாய் கூடச் சொன்னார்கள். ஆனால் பொதுப்பணித் துறையின் மதிப்பீடு 50,000 ரூபாய். ஆனால் பக்கத்தில் உள்ள நிலம் 64-ஆம் ஆண்டு வாங்கப்பட்ட நிலம். யாரும் தனிப்பட்டவர்கள் அல்ல. ஒரு சர்ச். Indian Evanjanical Luthran Church Trust Association என்கின்ற அசோசியேஷன் 1964-ஆம் ஆண்டு, 7—11—1964-ல், இப்பொழுது கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்கு வாங்கப்பட்டிருக்கும் நிலத்திற்கு

அருகில், 742/1பி, 742/3 ஏ. ஆகிய சர்வே எண்களில் அடங்கியுள்ள 25 செண்ட் நிலங்களை வாங்கியிருக்கிறார்கள். இப்பொழுது நாம் வாங்கியுள்ள நிலத்திற்கும், அந்த நிலத்திற்கும் இடையிலே உள்ள தூரம் 12 அடிதான். என்ன விலை தெரியுமா? அவர்களுக்கு முதலிலே ஒரு கிரவுண்ட் என்றால் என்ன கணக்கு என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். 5.5 செண்ட் கொண்டது ஒரு கிரவுண்ட். கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்கு நாம் கொடுத்துள்ள விலை 5.5 செண்ட் கொண்ட ஒரு கிரவுண்டுக்கு 4,031.50 காசு—ஒரு கிரவுண்டுக்கு. மாதா கோயில் டிரஸ்ட், 1964-ஆம் ஆண்டில் 5,500 ரூபாய் கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இந்த சர்வே எண்களில் 723/1ஏ. 1 ஏக்கர் 30 செண்ட் இருபோக நஞ்சை நிலம், 723/2 சர்வே எண் நிலம் 41 செண்ட் புஞ்சை, சர்வே எண். 724/1 நிலம் 1 ஏக்கர் 68 செண்ட் புஞ்சை நிலம். ஆகவே, 3 ஏக்கர் 39 செண்ட் நிலம், வெறும் 3 ஏக்கர் மட்டுமல்ல, 3 ஏக்கர் 39 செண்ட், 50,000 ரூபாய் பெருமானமுள்ளது என்று பொதுப்பணித் துறையால் நிர்ணயிக்கப்பட்ட கட்டிடம் இவைகளைச் சேர்த்துத்தான், ஏற்கெனவே 5,500 ரூபாய்க்கு வாங்கப்பட்டுள்ள இடத்திற்கு 12 அடி தொலைவில்தான் வாங்கப்பட்டுள்ளது, நகரின் மையமான இடத்தில். பக்கத்தில் ஒரு வீட்டுக்காரர்,—பத்திரிகைக்காரர்—அங்கு பத்திரிகை நடத்திக் கொண்டிருப்பவர், திருநெல்வேலி பத்திரிகைக்காரர், தினமலர் பத்திரிகைக்காரர்—அவர் அந்த இடத்தை இங்கே வாங்கிவிட்டால் தங்களுக்கு இடைஞ்சலாக இருக்கும் என்பதால் இப்படிப்பட்ட ஒரு செய்தி கர்த்தாவாக இருந்து வருகிறார் என்பதால் 3 இலட்சம் 3 ஏக்கர் என்று சொல்லப்படுகிறது. 1964-இலே ஒரு கிரவுண்ட் 5,500 ரூபாய்க்கு வாங்கப்பட்ட இடத்திற்கு அருகில், 4,031 ரூபாய் என்ற கிரயத்தைக் கொடுத்துத்தான் வாங்கப்பட்டிருக்கிறது. எனவே இதிலே எந்தவிதமான தவறும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காயாமொழி என்ற இடத்தில் நஞ்சை வயலே கிடையாது, அங்கு கார்டுகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் கூறினார். காயாமொழி என்ற இடத்தில் 1500 ஏக்கர் மொத்த நிலம் இருப்பதாகவும் அதிலே 222 ஏக்கர் நஞ்சை நிலம் இருப்பதாகத் தகவல் வந்திருககிறது. ஒரு வேளை அது சரியாக இல்லாவிட்டால் நான் திருநெல்வேலிக்கு வரும் நேரத்தில் எட்மண்ட் அவர்கள்—பயப்பட மாட்டார்கள் என்று கருதுகிறேன், நாங்கள் வலை வீசுவதாகக் கருத மாட்டார்கள் என்று கருதுகிறேன்—அந்த வகையில் அவர்களோடு போய் நிலைமையைத் தெரிந்து கொள்ள நிச்சயமாக நான் தயாராக இருக்கிறேன் என்பதையுப் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிம்சனைப் பற்றி திரு கே. டி .கே. தங்கமணி அவர்களும், திரு பொன்னப்ப நாடார் அவர்களும் எடுத்துக் கூறினார்கள். சிம்சன் விவகாரத்தில் 45 நாட்களில் விசாரணை முடிய வேண்டுமென்று சொல்லப்பட்டுருந்தும் கூட 160 விசாரணைக்கு மேல் நடைபெற்றதாலும், 600-க்கு மேற்பட்ட சாட்சிகள் விசாரிக்கப்பட்டதாலும் நாள் கடந்துவிட்டது.

இப்போது அவர்களும் விசாரணைகளை எல்லாம் முடித்துவிட்டார்கள். முதலமைச்சருக்கு விரைவில் அந்த விசாரணையினுடைய விவரங்களை அனுப்பி வைப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அது அனுப்பப்பட்டதும் சீக்கிரமாகப் பரிசீலனை செய்து தக்க முடிவு எடுக்கப்படும் என்ற உறுதியினை நான் இங்கே இந்த விவகாரத்தை எடுத்துச் சொன்ன மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் அத்தனை பேருக்கும் எடுத்துச் சொல்லி, இந்த விவாதத்தில் பல கருத்துக்களை எடுத்துச் சொன்ன அனைவருக்கும் மனமார நன்றி தெரிவித்து இந்த அளவில் அமைகின்றேன். வணக்கம்.

# சட்டமன்ற மேலவையில்


**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது இந்த மாமன்றத்தில் கடந்த ஏழு நாட்களாகவும், இன்றும் நடைபெற்றுள்ள விவாதத்தில் எதிர்க்கட்சியின் தலைவர் அவர்களும், இங்கேயுள்ள எதிர்க்கட்சிகள், தோழமைக் கட்சிகளின் தலைவர்களும் மிகச் சீரிய கருத்துக்கள் பலவற்றை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். மாறுபட்ட கருத்துக்கள் பல கூறப்பட்டிருந்தாலும், விவாதத்திற்கு ஏற்ற வகையில், நாகரிக அடிப்படையில் எடுத்துச் சொல்லப்பட்ட எல்லாக் கருத்துக்களையும் ஏற்றுக்கொள்கிறேன் என்று இல்லாவிட்டாலும் அந்தக் கருத்துக்கள், மிக்க பண்பின் அடிப்படையிலே எடுத்துச் சொல்லப்பட்டவையே என்கின்ற முறையில் கருத்துக்களை வழங்கியுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் அவர்கள் உரையின் தொடக்கத்தில் பெரியார் அவர்களுடைய மறைவு, குறித்து எடுத்துச் சொன்னதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இந்த மாமன்றத்திலே கோடிட்டுக் காட்டியிருக்கின்றார்கள். குறிப்பாக நம்முடைய நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் பெரியார் அவர்களுடைய நினைவாக நினைவு மண்டபம் கட்டுவதைவிட, சிலைகள் அமைப்பதைவிட அவருடைய அறிவு பிரதிபலிக்கின்ற கருத்துக்களைத் தமிழிலே மட்டுமல்ல, பிற மொழிகளிலும் ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து, இந்தியா முழுமைக்கும், ஏன் கடல் கடந்த நாடுகளுக்கும் அனுப்பி வைக்க வேண்டும். அதுதான் நாம் பெரியார் அவர்களுக்குக் காட்டுகின்ற நன்றிக் கடன் என்று குறிப்பிட்டார்கள். அதனை நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன். பெரியார் அவர்களின் இரங்கல் தீர்மானத்தின்போது கூறிய அந்தக் கருத்தின் அடிப்படையிலே, தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். தமிழ்நாட்டில் ஜாதி சமய வேறுபாடுகள், கடவுள்களின் பெயரால் ஏற்படுகின்ற குழப்பங்கள் இவைகளை எல்லாம் தீர்ப்பதற்கு மதத் தலைவர்களும், ஏனைய சீர்திருத்த எண்ணம் உடைய பெரியோர்களும் ஒன்றாகக் கலந்து ஒரு குழுவாகக்கூடி, இவைகள் தான் தமிழ்நாட்டில் பின்பற்றக்கூடிய கொள்கைகளாகக் கடவுளின் பெயராலேயும், மதத்தின் பெயராலேயும், சமுதாய அடிப்படையிலேயும் இருந்திட வேண்டுமென்கின்ற ஒரு திட்டவட்டமான கொள்கை எடுத்திட வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அதையும் நான் வரவேற்கிறேன். எல்லாக் கட்சிகளினுடைய தலைவர்களும், அரசியல் மாறுபாடு உணர்ச்சியில்லாமல், அதைப்போலவே மத வாதிகளும், வைதீக எண்ணம் கொண்டவர்களும்கூட தவத்திரு குன்றக்குடி அடிகளார் சொன்ன கருத்தை ஆராய்ந்து பார்த்துத் தங்களுடைய எண்ணங்களை அரசுக்கு எழுதுவார்களேயானால், அரசு முன்னோடியாக இருந்து அந்தக் காரியத்தைச் செய்வதற்குத் தயங்காது என்பதை நாம் இங்கே கூறிக்கொள்கின்றேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், தமிழரசுக் கழகத்தின் தலைவர், மேலவையினுடைய மாண்புமிகு துணைத் தலைவர் சிலம்புச் செல்வர் அவர்களும் வேறு சில உறுப்பினர்களும் இங்கே பேசுகின்ற நேரத்தில் இன்றைக்கு இந்தியாவிலேயே மிக ஆவலோடு எதிர்பார்க்கப்பட்ட இலங்கைப் பிரதமர், இந்தியப் பிரதமருடைய பேச்சு வார்த்தைகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இலங்கையிலே உலகத் தமிழ் மகாநாட்டை ஒட்டி நடைபெற்ற அமளியில் வேதனைப்படத்தக்க சம்பவங்கள் நிகழ்ந்து விட்டதைப்பற்றியும், அதைப்பற்றி இந்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்பதையும், இலங்கை நாட்டின் அளவிலே உள்நாட்டுப் பிரச்சினையாகக்கூடக் கருதாமல், அதையே சர்வ தேசப் பிரச்சினை என்கின்ற நிலைமையிலே அணுகி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழரசுக் கழகத் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள்.

குறிப்பிடும்போது அந்த வேகத்திலேயே இலங்கைப் பிரதமர் டெல்லிக்குச் செல்லுகின்ற வழியில் சென்னைக்கு வந்தபோது, தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் சென்று வரவேற்றது பண்பின் அடிப்படையிலே இருந்தாலும் நான் அதைப் பாராட்ட முடியாமல் இருக்கின்றேன் என்று சொன்னார்கள். அவர்கள் பண்பாட்டைப் பாராட்டி விட்டு என்னைப் பாராட்டாததற்காக நான் வருத்தப் படவில்லை. பாராட்டப்படவேண்டியது பண்பு என்ற அளவிலே அவர்கள் பாராட்டி இருக்கின்றார்கள். இந்தப் பண்பின் அடிப்படையிலேயும், அரசியல் மரபுகள், அரசியல் நாகரிகம் என்ற அடிப்படையிலேயும், இலங்கையினுடைய பிரதமர் இந்தியாவுக்கு வருகிற நேரத்தில் நான் வரவேற்க வேண்டிய கடமையைப் பெற்றவன் என்ற முறையிலே வரவேற்றேன் என்பதையும், அப்படி வரவேற்கிற அதே நேரத்திலே நம்முடைய உணர்ச்சிகளை, நம்முடைய பிரச்சினைகளை, தமிழர்களுக்கு இலங்கையிலே ஏதாவது கொடுமைகள் இழைக்கப்பட்டால் அவர்களைக் கண்டிக்கின்ற அந்த நெஞ்சத்து அழுத்தங்களை நிச்சயமாக நாம் மறந்து விடவில்லை என்பதையும் நாம் இங்கே சுட்டிக்காட்டப் பெரிதும் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வானொலியில் கேட்டு செய்திப் பத்திரிகையிலேகூட வந்திருக்கின்றது. ஏற்கனவே 1964-ஆம் ஆண்டு சிரிமாவோவும் லால்பகதூர் சாஸ்திரி அவர்களும் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் கிட்டத்தட்ட 5 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களை இந்தியா ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற ஒப்பந்தம் போக, இந்த ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் பேர்கள் நாடற்ற மக்களாக விடப்பட்டார்கள். இலங்கையில் அந்த ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் பேர்களுடைய பிரச்சினையைப் பிறகு தீர்த்துக் கொள்ளலாம் என்பதை 1964-ஆம் ஆண்டு ஒத்தி வைத்தார்கள். 10 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு 1974-ல் இப்போது அதைத் தீர்த்து விட்டதாக இன்றைக்குச் செய்தி வந்திருக்கிறது. செய்தியை வெளியிட்டிருக்கின்ற பத்திரிகை இதன் மூலமாக இலங்கை-இந்தியர்கள் பிரச்சினை முழுவதும் தீர்ந்து விட்டது என்




கின்ற குறிப்பைக் கோடிட்டு இருக்கின்றது. எப்படி அவர்கள் தீர்வு கண்டிருக்கின்றார்கள் என்றால், இலங்கையிலே நாடற்ற நிலைமையிலே இருக்கின்ற ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் இந்தியர்களில் 75 ஆயிரம் பேர்களை இலங்கை ஏற்று, குடி உரிமை அந்தஸ்து தர வேண்டும் என்றும், மீதமுள்ள 75 ஆயிரம் பேர்களுக்கு இந்தியா குடி உரிமைத் தகுதி தர வேண்டும் என்றும் தீர்மானித்து இருக்கின்றார்கள். இந்த ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் பேர்களில் 75 ஆயிரம் பேர்களுக்கு இலங்கை குடியுரிமைத் தகுதி தந்துவிட்டால், மீதமுள்ள 75 ஆயிரம் பேர்களையும் நாம் இங்கே ஏற்றுக் கொண்டு அவர்களுக்குக் குடியுரிமை அந்தஸ்து நாம் தந்துதான் ஆகவேண்டும். இந்த 75 ஆயிரம் பேரில் பெரும்பான்மையானவர்கள், நூற்றுக்கு தொன்னூற்றென்பது பேர்கள் தமிழர்கள், தென் நாட்டவர்கள், நாடற்றவர்கள் இருப்பார்கள். குறிப்பாக, இருப்பவர்கள் தமிழர்கள்தான் என்பதையும் யாரும் மறுக்க இயலாது. நான் இந்த முடிவை வரவேற்கின்ற நிலைமையிலேயே இல்லை. பாராட்டுகின்ற நிலைமையிலே இல்லை. தமிழ்நாட்டு மக்களின் சார்பாக, தமிழக அரசின் சார்பாக என்னுடைய வேதனையைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்னும் சொல்லப்போனால் கண்டனத்தைக்கூடத் தெரிவிக்கின்ற உரிமை நமக்கு உண்டு.

ஏற்கெனவே 5 இலட்சம் தமிழர்களுக்கு நாம் இங்கே வாழ்வளிக்கின்ற பொறுப்பை ஏற்றிருக்கிறோம். கடந்த 5, 6 ஆண்டுகளிலே இலங்கையில் இருந்து அனுப்பப்பட வேண்டியவர்கள் பல்வேறு பிரச்சினைகள் " காரணமாக அனுப்பப்படாமல் ஒரு தேக்க நிலை ஏற்பட்டு வருகின்ற அளவிலே 57 ஆயிரம் குடும்பங்களை

நாம் ஒரே நேரத்தில் சுமக்க வேண்டிய ஒரு பெரும் பொறுப்பு தமிழ்நாட்டு அரசினுடைய தோளுக்கு விழுந்திருக்கின்றது. அதற்கு இந்திய அரசு உதவி இருந்தாலுங்கூட அந்தப் பெரும் பொறுப்புக்கான ஆக்கப்பணிகளை, வாய்ப்பு வசதிகளை உருவாக்க வேண்டிய அந்தக் கடமைக்கு நம்மிடையேயுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கிடையே ஆட்பட்டிருக்கிறோம். இந்த நிலைமையிலேயே மீண்டும் அந்த 75 ஆயிரம் பேர்கள், நாடற்றவர்கள் என்று கருதப்படுபவர்கள், 10 ஆண்டுக்காலத்திற்குப்பிறகு அதிலே பாதிப் பேர்களை அவர்களும், பாதிப் பேர்களை நாமும் ஏற்றுக் குடியுரிமை பெற்றவர்களாக ஆக்க வேண்டும் என்று ஒப்பந்தம் செய்துகொண்டிருப்பது சரியல்ல. அது மாத்திரம் அல்ல. இப்படிப்பட்ட ஒரு முடிவு எடுக்கப்பட்ட நேரத்தில், 75 ஆயிரம் பேர்கள், ஏன் ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் பேர்களில், முக்கால் பகுதிக்கு மேற்பட்டவர்கள் தமிழராக இருந்தும், தமிழ்நாடு அரசு கலந்தாலோசிக்கப்படவில்லை என்பதும் ஒரு வருந்தத்தக்க செய்தியாகும். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். இந்தியாவிலேயே ஒரே ஒரு மாற்றுக்கட்சி ஆளுகின்றது. நம்முடைய தமிழ்நாடுதான் அது என்று சொன்னார்கள். அந்த மாற்றுக் கட்சி ஆளுகின்ற மாநிலத்திற்கு இப்படிப்பட்ட ஒரு மரியாதைதான் மத்திய சர்க்காரிலே இருந்து கிடைத்திருக்கின்றது என்பதை நாம் இங்கே எடுத்துக் காட்டாமலும் இருக்க முடியாது.

அடுத்தபடியாக இன்னொரு பிரச்சினை. கச்சத்தீவுப் பிரச்சினை. இந்தக் கச்சத்தீவுப் பிரச்சினை குறித்துத் தமிழக அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது என்பதைப் பற்றிய விவரங்களைத் தாம் அறிய விரும்புவதாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். பல்வேறு நேரங்களில் நான் பிரதமரைச் சந்தித்த நேரத்தில் அது பற்றி உரையாடியிருக்கிறேன். முன்பு, இந்தியப் பிரதமர் இலங்கை நாடு சென்று திரும்பிய பிறகு, டெல்லியில், நானும் நம்முடைய தொழில் அமைச்சர் அவர்களும், பிரதமர் அவர்களைச் சந்தித்துப் பேசியபோது, கச்சத்தீவுப் பிரச்சினையை, மிக அதிக அளவுக்கு அவர்களிடம் வலியுறுத்தி, இது தமிழ்நாட்டினுடைய மக்கள் உணர்ச்சி வயப்பட்ட காரியம், இதிலே எந்த அவசர முடிவும் எடுக்கலாகாது, கச்சத்தீவு தமிழர்களுக்குச் சொந்தமானது என்பதை வலியுறுத்திக் கூறியிருக்கிறோம். இப்போதும், பண்டாரநாயகா அவர்களை நான் தமிழகத்தில் வரவேற்ற அதே நேரத்தில், ஜனவரித் திங்கள் 16-ஆம் தேதி அவர்கள் டெல்லிக்குச் சென்றுகொண்டிருக்கிற நேரத்தில், நான் இந்தியப் பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில்......

"The Sri Lanka Survey Map of 1954 also does not include Katcha Deevu as part of Sri Lanka. Historical records indicate that the pearl and chunk fisheries on the Tamil Nadu coast belong to the rulers in South India including the Raja of Ramnad since time immemorial. There is ample evidence to show that the Raja of Ramnad exercised property rights ever the chunk fisheries on the west of Katcha Deevu and also over the rights of Katcha Deevu. He never paid rent or

royalty to Sri Lanka Government at any time....I do hope that during the ensuing visit of Prime Minister of Sri Lanka, any claim by Sri Lanka Government to Katcha Deevu will be repudiated successfully."


என்று நான் பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். கச்சத் தீவுப் பிரச்சினையில், தமிழ்நாடு மிகுந்த ஆர்வத்தோடும், அது தமிழ்நாட்டிலிருந்து பிரிக்கப்பட விடக்கூடாது என்பதில் அக்கறையோடும் இருக்கிறது; இன்னொன்றையும் நான் என்னிடத்தில் பேசிய மத்திய சர்க்கார் அதிகாரிகளிடத்திலும், ஒரு முறை வெளி நாட்டு அமைச்சர் அவர்களிடத்திலும் டெல்லிக்குப் போனபோது சொல்லியிருக்கிறேன். அந்த நேரத்திலும் நான் குறிப்பிட்டிருக்கிறேன். கச்சத்தீவு என்பது தமிழ்நாட்டுக்குச் சொந்தம் என்கின்ற முறையில் நீங்கள் எங்களைச் சமாதானப்படுத்திப் புண்ணியம் இல்லை, பயனில்லை. உங்களுக்கு அந்த உணர்வு வரவேண்டும். இந்த நேரத்தில் தமிழ்நாடு, இந்தியா என்று பிரிக்காதீர்கள். கச்சத்தீவு இந்தியாவுக்குச் சொந்தம் என்கின்ற உணர்ச்சியோடு நீங்கள் கச்சத்தீவை இழக்காமல் இருந்திட வேண்டும் என்று தான் அவர்களிடத்தில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கின்றேன். ஆகவே, கடைசி வரையில் தமிழ்நாடு அரசாங்கம், கச்சத்தீவு பறிக்கப்படாமல் இருப்பதிலே அதனுடைய போராட்டத்தை நடத்தும் என்பதை நான் இங்கே மிக அழுத்தந்திருத்தமாகக் கூறிக்கொள்கிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையில், மிக முக்கியமாக நம்முடைய நண்பர், சுதந்திராக் கட்சியின் தோழர் சுவாமிநாதன்



அவர்கள், நேற்றைய தினம் பேசுகின்ற நேரத்தில், ஒன்றைச் சொன்னார்கள், திட்டவட்டமாக ஒன்றைச் சொன்னார்கள், அதாவது திட்டங்கள் தேவையில்லை என்ற முறையில், திட்டங்களுக்கு விடுமுறை விடப்பட்டாக வேண்டும் என்று சொன்னார்கள். திட்டங்களுக்கு நாம் ஒரு முறை விடுமுறை அளித்து, அதனுடைய பயனை நாம் அனுபவித்திருக்கிறோம். 1966-67, 67-68, 68-69 ஆகிய இந்த ஆண்டுகள், திட்ட விடுமுறை ஆண்டுகளாகக் கருதப் பட்டன. இந்த ஆண்டுகளில் நமக்கு ஏற்பட்ட நிலைமைகளை நாம் சிந்திக்கத் தவறி விடக்கூடாது. திட்ட விடுமுறைக் காலத்தில், நெடுங்காலத் திட்டங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அது நாட்டுக்கு நல்லதல்ல. திட்ட விடு முறையின் காரணமாக, சேலம் இரும்பாலை, நெய்வேலியை விரிவு படுத்தும் திட்டம், புதிய மின்வசதித் திட்டங்கள் இவைகள் எல்லாம் இடம் பெறாமல் போய்விட்டன என்பதை நாம் மறந்து விடக்கூடாது. பொதுத்துறையின் மூலதனச் செலவு-இன்வெஸ்ட் மெண்ட்-குறைகிற நேரத்தில், நாட்டிலுள்ள 'பர்ச்சேசிங் பவர்'-வாங்குகிற சக்தி குறைந்து விடுகிறது. இது திட்ட விடுமுறை யினால் ஏற்படுகின்ற ஒரு கொடுமையான விளைவு ஆகும். தனியார் துறையில்கூட, திட்ட விடுமுறையின் காரணமாக மந்தநிலை ஏற்படு கிறது என்பதை நாம் மறக்க இயலாது.

திட்ட விடுமுறையின்போது, இந்தியாவிலுள்ள 600 நூற் பாலைகளில், 100 நூற்பாலைகளை மூடவேண்டிய நிலைமை ஏற்பட்டது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. கட்டிட வேலை குறைந்து விட்ட காரணததால், இரும்பு, சிமிண்ட் தொழிற்சாலைகளில் பெரிய பிரச்சினை இந்த விடுமுறைக் காலத்தில் ஏற்பட்டது. தனி யார் தொழிற்சாலைகள் மூடப்பட்டு, இலட்சக்கணக்கான மக்கள் வேலை இழந்தார்கள். இவைகள் எல்லாம் 66ம் ஆண்டில் இருந்து 69-ஆம் ஆண்டு வரையில் ஏற்பட்ட திட்டங்களுக்கான விடுமுறை யின் காரணமாக ஏற்பட்ட நஷ்டங்கள், திட்ட விடுமுறை சுதந் திராக்கட்சியின் கொள்கையாக இருந்தாலும், அல்லது திட்டங் களே தேவை இல்லை என்பது அவர்களுடைய கொள்கையாக இருந்தாலும், அதன் காரணமாக, தமிழ்நாட்டின் தேவைகள் பலவற்றை நாம் இழந்திருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்டத் தான் இவைகளை எல்லாம் குறிப்பிட்டேன். ஒருவேளை, திட்டம் மத்திய அளவில் தேவையில்லை, அது மாநில அளவில் இருக்க வேண்டும் என்கின்ற மாநில சுயாட்சிக்கொள்கையின் அடிப்படை யில் நண்பர் சுவாமிநாதன் அந்தக் கருத்தைச் சொல்லியிருந்தால், அதை என்னால் புரிந்து கொள்ள முடியும். அதை நண்பர் ஆறுமுக சாமி ஏற்கிறாரோ இல்லையோ, ஆனால் மாநில அளவில்தான் திட் டங்கள் போடப்பட வேண்டும் என்று கருதினால் நான் அதை வரவேற்பேன். ஆனால் திட்டங்களே தேவையில்லை என்பது நல்ல தல்ல. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அது ஏற்றதல்ல. குறிப்பாக, கவர்னர் அவர்களுடைய உரையில் சுட்டிக்காட்டப் பட்டிருக்கின்றது. ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் எவ்வளவு கேட்டோம், எவ்வளவு கிடைக்கும் என்று சொன்னார்கள், எவ் வளவு கொடுக்கக்கூடிய நம்பிக்கை, சூழ்நிலை ஏற்பட்டிருக்கிற தென்பதை எல்லாம் நேற்றைய தினம் நான் பேரவையில் குறிப்



பிட்டிருக்கிறேன். ஐந்தாண்டுத் திட்டங்கள் பற்றிப் பேசுகிற நேரத்திலும், வரவுசெலவுத்திட்டம் பற்றிப் பேசுகிற நேரத்திலும் அவைகள் பற்றிக் குறிப்பிடுவதற்கு வாய்ப்புகள் நிறைய இருக்கும் என்கிற காரணத்தால் அவைகளில் நான் இப்போது நேரத்தைச் செலவழிப்பதற்கு விரும்பவில்லை.

அடுத்து, நதிகளைத் தேசியமயமாக்குவது பற்றி அன்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு சித்திரா நாராயணசாமி அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். இப்போது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் அதுபற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். நாட்டிலுள்ள எல்லா நதிகளையும் தேசியமயமாக்கிவிட வேண்டும் என்கின்ற அந்தப் பிரச்சினையின்மீது தமிழ்நாடு அரசு தன் மாறுபட்ட கருத்தையும் எடுத்துக் கூறியிருக்கின்றது. இன்றைக்கு உள்ள அரசியல் சட்டத்தில் 262/1-வது பிரிவு மாற்றப் பட வேண்டும் என்று மத்திய அரசு விரும்புகிறது, இந்த நதிநீர்ப் பிரச்சினை சம்பந்தமாக. அப்போது அதில் என்ன இருக்கின்றது. அதை எப்படி மாற்ற வேண்டும் என்று மத்திய அரசு விரும்புகிறது என்பதை நாம் கவனிப்பது நலம். இன்றைக்கு அரசியல் சட்டப் பிரிவு 262/1ல் இருப்பது :

Article 262 (1) Parliament may by law provide for the adjudication of any dispute or complaint with respect to use distribution or control of the waters of, or in, any inter-State river or river valley.

அது இப்பொழுது இருப்பது.

அவர்கள் மாற்ற விரும்புவது.

"Parliament by law provide for the settlement of any dispute or complaint with respect to use, distribution, control, regulation or development of water including the waters of, or in, any river or river valley."

ஏற்கெனவே இருப்பது Inter State rivers or river valley என்று இருக்கிறது. இப்போது Inter States river என்பதை எடுத்துவிட்டு any river என்று மாற்றி அமைக்க நினைக்கின்றார்கள். இப்படிப் போடுவது காரணமாக காவிரி நீர் பிரச்சினையைத் தீர்க்கும் நேரத்தில் அது Inter State river என ஆகிறது. ஒரு மாநிலத்தை இன்னொரு மாநிலத்தோடு இணைக்கும் நதிகளுக்கும், ஒரு மாநிலத்திற்குள்ளேயே ஓடிக்கொண்டு இருக்கும் நதிகளுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை மத்திய சர்க்காருக்கு உணர்த்தியிருக்கிறோம். 'மாநிலத்திற்குள்ளேயே ஓடிக்கொண்டு இருக்கும் நதிகளையும் நீங்கள் தேசிய மயமாக்கும் திட்டத்தினை நாங்கள் ஏற்றுக்கொள்ள இயலாது' என்று மத்திய சர்க்காருக்குக் குறிப்பிட்டு எழுதியிருக்கிறோம். நாம் என்ன கருத்தைச் சொல்லியிருக்கிறோம் என்று சொன்னால், ஒன்று நாடாளும் மன்றத்தின் அதிகார வரம்பு, 'மாநிலங்களுக்கு இடையிலே ஓடும் ஆற்றுநீரைப் பயன் படுத்திக்கொள்ளுவதில் தகராறுகள் ஆகியவை குறித்த மட்டும்' என்று வரையறுக்கப்படலாம் என்று ஒப்புக்கொண்டு இருக்கிறோம். Inter State rivers-க்கு இருக்கலாம்.

இரண்டாவது, மாநிலங்களுக்கு இடையிலே ஓடும் ஆற்று நீர் குறித்துத் தகராறு எழுந்தால், சம்பந்தப்பட்ட மாநிலங்களின் முதலமைச்சர்கள் அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளுக்கு இடையே பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட வேண்டும்.

மூன்று, அத்தகைய பேச்சு வார்த்தைகளில் உடன்பாடு ஏற்படாவிட்டால் பிறகு இந்தியத் தலைமை அமைச்சர் அல்லது தலைமை அமைச்சர் தலைவராக இருக்கும் தேசிய நீர் ஆய்வுக் குழு நடுவராக இருந்து அத்தகைய தகராறுகளைத் தீர்த்து வைக்கலாம். இந்த இறுதி முடிவிற்கு எதிராக தலைமை உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்து கொள்ளலாம். அந்த மேல் முறையீட்டினை ஐந்து பேருக்குக் குறையாத தலைமை உயர்நீதி மன்ற நீதிபதிகளைக் கொண்டதொரு குழு முடிவு செய்ய வேண்டும் என்று இந்தக் கருத்துக்களை நாம் எடுத்துக் கூறியிருக்கிறோம். ஏன் என்றால் காவிரி போன்று ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு இடையே ஓடும் நதிகளைத் தேசிய மயமாக்கி, அதை தேசிய அளவில் அணுகுவதுதான் முறையாகும். ஆனால் மாநிலங்களுக்குள்ளேயே ஓடிக்கொண்டு இருக்கும் ஆறுகளின் மீது மத்திய சர்க்கார் ஆதிக்கம் செலுத்த நினைப்பது - ஏற்கெனவே இருக்கும் ஆதிக்கங்களையெல்லாம் குறைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிக்கொண்டு இருக்கும் நேரத்தில் புதிதாக இப்போது இந்த ஒரு ஆதிக்கத்தைச் செலுத்துங்கள் என்று கேட்பதுபோலாகும் என்று கருதி அரசு, தமிழக அரசு, அதை அடியோடு மறுத்துவிடவில்லை. ஆனால் இத்தகைய மாற்று யோசனைகளையும் மத்திய சர்க்காருக்குத் தெரிவித்து இருக்கிறோம் என்பதையும் நான் கூறிக்கொள்ளுகிறேன்.

காவிரி நீர்ப் பிரச்சினையைப்பற்றி இங்கே திரு தீட்சிதர் அவர்களும் மாண்புமிகு சாமிநாதன் அவர்களும் நேற்றும் அதற்கு முன்தினமும் பேசியிருக்கின்றார்கள். இந்தப் பிரச்சினை குறித்துப் பல்வேறு கட்டங்களிலே பல்வேறு குழுக்கள் போடப்பட்டு அந்தக் குழுக்கள் ஒவ்வொரு பகுதியாக முடித்துவிட்டு இப்போது கடைசியாக 10-10-'73ல் அந்தக் குழுவின் இரண்டாவது கட்டப் பேச்சு விரைவில் டெல்லியில் நடைபெற்று முடிய நீர்ப்பாசன இலாகாவின் துணைக் காரியதரிசி திரு சி.சி. படேல் அவர்கள் அந்தக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டு அவர் இந்த மூன்று மாநிலங்களுக்கும் சென்று நீர்ப்பாசனத் திட்டங்களைப் பார்வையிட்டு, எப்படி காவிரி நீரைச் சிக்கனமாகப் பயன் படுத்தலாம் என்று மூன்று மாநிலங்களும் ஓர் ஆய்வு செய்ய வேண்டும் என்று கடைசியாக தீர்மானிக்கப்பட்டு அவர் நம் மாநிலத்திற்கு 5-11-73 முதல் 11-11-73 வரையில் வந்து காவிரி டெல்டா பிரதேசத்தைப் பார்வையிட்டுச் சென்றிருக்கின்றார்கள். இன்னும் அந்தக் குழு தன் அறிக்கையைச் சமர்ப்பிக்கவில்லை என்று தெரிகின்றது. விரைவில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். குழுவின் அறிக்கை கிடைத்தவுடன் அடுத்துப் பேச்சு வார்த்தைகள் நடைபெறும். அதற்கு மூன்று மாநில அமைச்சர்களும் அழைக்கப்படுவர் என்று டெல்லியிலிருந்து செய்தி வந்திருக்கும் காரணத்தினால் காவிரி நீர்ப் பிரச்சினைபற்றி இப்போது நாம் அதிக அளவிற்குக் கவலைப்படாமல் நம்பிக்கையோடு இருக்கலாம். நம் உரிமைகளை விட்டுக் கொடுத்துவிடாத அளவிற்குத் தமிழக அரசு ஏற்கெனவே ஒவ்வொரு பிரச்சினையிலும் அனைத்துக்கட்சித் தலைவர்களையும் கலந்து முடிவெடுப்பதுபோல காவிரி நீர் பிரச்சினையிலும் மற்ற பொதுப் பிரச்சினைகளை அணுகுவதைப்போலவே அனைத்துக் கட்சித் தலைவர்களின் முடிவினைத் தமிழக அரசு நிறைவேற்றும் என்பதை நான் இங்கே உறுதியாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நமது நண்பர் கே. எம். கணபதி பேசுகின்ற நேரத்திலே, தமிழ் நாடு இன்டர்ஸ்டிரியில் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பொரேஷன் ஏதோ 4·75 லட்ச ரூபாய் வட்டியை வஜா செய்துவிட்டது என்பதை அகௌண்டன்ட் ஜெனரல் ஒரு குறிப்பு கொடுத்திருக்கின்றார்கள் என்று படித்துக்காட்டி, ஏதோ தவறு நடந்திருக்கின்றதோ என்று ஐயப்படுகின்ற வண்ணம் அதை எடுத்துச் சொன்னார்கள். அதைப்பற்றி நான் சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன். கோவையில் அகூரா வெல்டிங் எலெக்டிரானிக்ஸ் லிமிடெட் என்ற கம்பெனிக்கு, இப்போதல்ல 1966-லே 10 லட்சம் ரூபாயும், அதற்குப் பிறகு 1969-லே 3.2 லட்சம் ரூபாயும், மொத்தம் 13.2 லட்ச ரூபாய் கடன் அளிக்கப்பட்டது. ஆனால் அந்தக் கம்பெனி 1967-லே உற்பத்தியைத் தொடங்கிய போது, மார்க்கெட்டில் அதனுடைய எலெக்டிரோட்ஸ் தேவைகள், வெல்டிங் எலேக்டிரோட்ஸ் தேவைகள் குறைந்து விட்ட காரணத்தால், அவர்களால் வியாபாரத்தை நடத்த முடியவில்லை. அவர்கள் கம்பெனியையே மூடிவிடும் சூழ்நிலை ஏற்பட்டபோது, அதை இன்னொருவர் வாங்கி நடத்துவதற்கு—சூரத்தைச் சேர்ந்த ஒருவர், வெல்டிங் ராட்ஸ் தயாரிக்கும் கம்பெனி வாங்கி நடத்த-முன் வந்தார். அவர் போட்ட நிபந்தனை, இந்த 13 லட்ச ரூபாய்

முதலீட்டைத் தந்துவிடுகின்றேன். 4 லட்ச ரூபாய் வட்டியை நான் சுமக்க வேண்டுமென்றால், வாங்கத் தயாராயில்லை என்று கூறிவிட்டார். அந்த கார்பொரேஷனுக்கு இருந்த சங்கடம், அந்த முதல் காப்பாற்றப்பட்டால் போதும் என்பதற்காக, அவர்கள் வட்டியைத் தள்ளிக் கொடுத்துவிட்டு, 13 லட்ச ரூபாய்க்கு சூரத்தைச் சேர்ந்த வெல்டிங் ராட் தயாரிப்புக் கம்பெனிக்கு அதை மாற்றிக் கொடுத்தார்கள். இப்போது டி.ஐ.டி. சிக்குச் சேர வேண்டிய கடனும், அதற்கான வட்டியும் ஒழுங்காகக் கிடைத்து வருகிறது. நாம் அதைத் தள்ளிக் கொடுக்க மறுத்திருந்தால் 13 லட்ச ரூபாயும் சேர்ந்து போயிருக்கும். ஆகவே இந்த ஏற்பாட்டை அந்தக் கார்பொரேஷன் செய்தது என்கின்ற விளக்கத்தை நண்பர் கணபதி அவர்களுக்கு நான் அளித்துக் கொள்கின்றேன்.

திரு. பலராமன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில், அதனுடைய 17-வது ஆண்டறிக்கையில் 72 ஆயிரம் காலி கோணிப் பைகள் இரண்டாம் தர விற்பனை மூலம், ஒரு பைக்கு 75 பைசா வீதம் 54,000 ரூபாய் மதிப்பிட்டுள்ளது என்றும், இதில் ஊழல் ஏற்பட்டிருக்கிறது என்றார். ஊழல் என்கின்ற வார்த்தை கிடைத்தாலும் கிடைத்தது எதற்கெடுத்தாலும் அதைப் பயன்படுத்தி அதற்குள்ள செல்வாக்கையே இன்றைக்குக் குறைத்துவிட்டோம். நம்முடைய நண்பர் பலராமன் இதையே தேடித்தேடிக் கேட்டுக்கொண்டிருக்கிறார். நல்லவைகளையும் தேட வேண்டும். ஏதாவது கிடைக்காதா என்று தேடுகின்றோம். எதிர்க்கட்சிகள் வேலை அதுதான். அப்படிச் சுட்டிக் காட்ட வேண்டியதுதான். இல்லை என்று சொல்லவில்லை. ஆனாலும் கொஞ்சம் ஆராய்ந்து, சிந்தித்து, அவைகளைப் புற்றிச் சுட்டிக் காட்டுவது நல்லது. பத்திரிகைகளில் எத்தனையோ வருகிறது. நான் சட்டப் பேரவையில் கூடச் சொன்னேன், ஏதோ "3 ஏக்கரா, 3 லட்சம், இடத்தை வாங்கி விட்டார்கள்" என்று. பிறகு பார்த்தால் ஒரு கிரவுண்டு 5,000 ரூபாய்க்கு குறைவாக வாங்கியிருக்கிறார்கள். பக்கத்தில் 5,000 ரூபாய் ஒரு கிரவுண்ட் வாங்கியிருக்கிறார்கள். 4,000 ரூபாய்க்குத்தான் நம்முடைய போக்குவரத்து கார்பொரேஷன் அங்கே கிரவுண்டு வாங்கியிருக்கிறது. 3 ஏக்கரா, 3 லட்சம், அதில் மோசடி நடந்துவிட்டது என்றெல்லாம் சொன்னார்கள். அதைப் போலவே 72,000 காலி கோணிப்பை, 54,000 ரூபாய், அதனால் நஷ்டம் என்று சொன்னார்கள். இந்த அறிக்கையை வைத்துக்கொண்டுதான் அவர்களும் சொன்னார்கள். ஆனால் அறிக்கையைச் சரியாகப் படித்திருந்தால், தலைப்பில் என்ன இருக்கிறதென்றால், "1972-73-ஆம் ஆண்டின் கால்நடைத் தீவன உற்பத்திப் பிரிவின் வரவு செலவுத் திட்டம், எதிர்பார்க்கப்படும் கால்நடைத் தீவன மொத்த உற்பத்தி 3,600 டன்கள், உத்தேசச் செலவு" என்று பட்ஜெட் போட்டிருக்கின்றார்கள். அவர்கள் 3,600 டன் அங்கே தீவன உற்பத்தி செய்யலாம் என்று எதிர்பார்த்தார்கள். 3,600 டன் தீவன உற்பத்தி செய்வதாக இருந்தால், அதற்கான 'ரா' மெடீரியல்' வரவேண்டுமல்லவா. அது கோணிப்பைகளில்தான் வரும். அப்படி 3,600 டன் ரா மெடீரியல் வரும்போது, கோணிப்பையில் வந்தால், அப்படி வருகின்ற பைகள் கிட்டத்தட்ட 72,000 பைகள் இருக்கும்

அந்த 72,000 பைகளை நாம் மறுவிலைக்கு விற்ருல் அதில் 54,000 ரூபாய் கிடைக்கும். இதெல்லாம் கற்பனைகள். வரும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால், 3,600 டன் அங்கே உற்பத்திக்கான காரியங்கள் நடைபெறவில்லை. 600 டன்னுக்குக் குறைவாகத்தான் உற்பத்தியாயிற்று. கோணிப்பைகள் விற்கப்படவுமில்லை. ஏனென்ருல், 72,000 பைகள் வந்தால் அல்லவா 54,000 ரூபாய்க்கு விற்பார்கள். விற்கப்படவுமில்லை. ஆனுல் பலராமன் அவர்களுக்கு 72,000 தெரிந்தது, 54,000 தெரிந்தது, உடனே ஊழல் என்று சொல்லத் தெரிந்தது. மேல் தலைப்பை பார்த்திருந்தால், உத்தேசச் செலவு என்றுதான் போட்டிருக்கும். செலவு அல்ல, உத்தேசச் செலவுதான். ஆகவே அதிலே எந்த விதமான ஊழலும் இல்லை என்று நான் இங்கே சொல்லிக் கொள்கின்றேன்.

மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தெரிவித்த அரிய கருத்துக்களுக்கெல்லாம் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். நம்முடைய நண்பர் ஆறுமுகசாமி நேற்றைய தினம் பேசுகின்ற நேரத்தில், கவர்னருடைய உரையில் எல்லாப் பகுதிகளையும் விட்டுவிட்டு, எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக் காட்டிய பகுதியை மாத்திரம், அந்தப் பேச்சின் மைய அம்சமாக வைத்துக்கொண்டு பேசினுர்கள். அவர்கள், மக்களெல்லாம் விரக்தி அடைந்திருப்பதாகச் சொன்னுர்கள். அவர் பேசியதைப் பார்த்த பிறகு, அவரே ஏதோ விரக்தி அடைந்திருப்பது போன்ற ஓர் உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. ஏனென்ருல் இருக்கின்ற அரசியலில் அப்படிப்பட்ட விரக்தி நிலைமை ஆறுமுகசாமி போன்ற நல்லவர்களுக்கு ஏற்படுவது விசித்திரமல்லை. நான் முன்பே ஒரு முறை சொன்னேன். அவருடைய பேச்சு இப்போதெல்லாம் ஜெயப்பிரகாஷ் நாராயண் பேச்சுப்போல் அமைந்திருக்கிறது என்று குறிப்பிட்டேன். அதையே தான் நேற்றைய தினம் சொன்னுர்கள். விரக்தி வருவதற்கு நியாயம் இருக்கிறது. அவர் சோஷலிசம் பேசுகிருர். இங்கே ஒரு கட்சியில் தன்னை இணைத்துக்கொண்டிருக்கிருர். ஆனுல் இங்கே அந்தக் கட்சியில் இணைத்துக்கொண்டிருக்கின்ற நேரத்திலே, இங்கே அந்தக் கட்சியிலிருந்து பத்திரிகை நிர்வாக ஆசிரியராக இருப்பவர் சோஷலிச அடிப்படையில் இன்றைக்கு மின்சார கம்பெனியை நாம் தேசியமயமாக்குகின்ற நேரத்தில், அதை எதிர்த்துக் கோர்ட்டுக்குப் போகிருர். சோஷலிசம்! அதைப் பார்த்தால் ஆறுமுகசாமிக்கு விரக்தி வருமா, வராதா? நம்முடைய கட்சியைச் சேர்ந்தவர், ஒரு பத்திரிகையை நடத்துகிருர். இந்த நிலைமையிலே நாம் நம்மை இணைத்துக்கொண்டிருக்கிருேமே என்ற விரக்தி நல்ல உள்ளங்களுக்கு ஏற்படத்தான் செய்யும். நான் அவரைக் கேட்டுக் கொள்வேன். மக்களுடைய விரக்தியை நீக்குவதற்கு நாமெல்லாம் விரக்தியிலிருந்து விடுபட வேண்டும். அந்த அளவிலே ஆறுமுகசாமி போன்றவர்கள் விரக்தியிலிருந்து விடுபட்டு, ஏதாவது ஆகிவிட்டுப் போகட்டும் என்ற நிலைமை இல்லாமல், அவர் இன்னும் தேவையான நல்ல கருத்துக்களை நாட்டுக்கும், இந்த அரசாங்கத்துக்கும் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்வேன்.

சிலம்புச் செல்வர் அவர்கள், மாநில சுயாட்சி பற்றி இன்னொரு நாள் எடுத்துச் சொல்லிக் கொள்கிறேன் என்று சொல்லி விட்டு, கிட்டத்தட்ட, பேச்சின் முக்கால் பகுதியில் அவர்களுடைய உணர்வுகளை அடக்கிக் கொள்ள முடியாமல் மாநில சுயாட்சி பற்றிய விளக்கங்களை எல்லாம் அவருக்கே உரிய பாணியில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதை மறுக்காமல் இருக்க முடியாது என்பதற்காக அவர்கள் அதை மறுத்து இருக்கின்றார்கள். மற்ற அதிகாரங்கள் அதிகமாக கேளுங்கள், மாநில சுயாட்சி என்று கேட்காதீர்கள் என்று சொன்னார்கள். இது கல்யாணம் வேண்டும் என்கின்ற பிள்ளையைப் பார்த்து, குடும்பம் நடத்த வேண்டும் என்று சொல், கல்யாணம் வேண்டும் என்று கேட்காதே என்று சொல்வதைப்போல்தான் இருக்கிறது என்பதையும் குறிப்பிட்டு, இந்த விவாதத்திலே கலந்துகொண்ட அனைவர்க்கும் நன்றி கூறி, தரப்பட்டிருக்கின்ற திருத்தங்களையெல்லாம் திரும்பப்பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். முத்துசாமி போன தடவை திரும்பப் பெறவில்லை. இந்த ஆண்டு ஆசிரியர்களுக்காக பல விஷயங்களைச் சொல்லி இருக்கிறார். அதைப்பற்றி என்ன நடக்கப் போகிறது என்று காண ஆசிரியர்களும் காத்திருக்கிறார்கள். ஆகவே நான் முத்துசாமியைக் கேட்டுக் கொள்வேன், அவர்கள் அதைப் போன ஆண்டைப்போல் வலியுறுத்தாமல் திருத்தங்களையெல்லாம் வாபஸ் பெற்று, கவர்னர் உரைக்குக் காட்ட வேண்டிய மரபைக் காட்ட வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக்கொண்டு, அதைப்போல பலராமன் அவர்களையும், மற்றும் திருத்தம் கொடுத்த வசந்த்பாய் அவர்களையும் கேட்டுக்கொண்டு இந்த அளவிலே அமைகிறேன். வணக்கம்.

**தமிழரசு**

16—2—1974 இதழின்

இலவச இணைப்பு